வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 25.10.2023 புதன்கிழமை | இதழ் : 319 | பக்கங்கள் : 16

## வரிசை யுகத்துக்கே மீள நாடு திரும்ப நேரிடும்!

### ஐக்கிய தேசியக் கட்சி சொல்கிறது

கொழும்பு, ஒக். 25

மின்சார கட்டண அதிகரிப்பு மக்களுக்கு தாங்கிக்கொள்ள முடியாத சுமை என்பதை ஏற்றுக் கொள்கிறோம். என்றாலும் குறுகிய காலத்துக் காவது இதனை தாங்கிக் கொள்ளாவிட்டால் மீண்டும் வரிசை நிலைமைக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்படும் என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி

11

## போதை கடத்தலை தடுக்க புதிய கட்டளை பணியகம்

போதைப்பொருள் கடத்தலை தடுப்பதற்காக புதிய கட்டளை நிறுவனம் நிறுவப்படும் என்று ஜனாதிபதியின் பணிக் குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க தெரிவித் துள்ளார்.

வெளிநாடுகளிலி ருந்து போதைப்பொருள் நாட்டுக்குள் கொண்டு வரப்படுவதை தடுக்கும் நோக்கில் இந்த நிறுவனம் அமைக்கப்படு கின்றது என்றும் அவர் கூறினார்.

இந்த நிறுவனம் முப் படையினர் மற்றும் அரச புலனாய்வு பிரிவை இணைத்து சுற்றிவளைப்புகளுக்கு அவசியமான திட்டங் களை வகுக்க முடியும். அண்மையில் காலியின் மேற்கு பகுதியில்

11

## பொங்கலில் ஈடுபட்டிருந்த பெண் விபத்தில் உயிரிழப்பு

### நீர்வேலியில் நேற்று சோகம்

யாழ்ப்பாணம், ஒக். 25

ஆலயத்தில் பொங்கல் பொங்கிக் கொண்டிருந்த பெண்ணை வாகனம் மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

நீர்வேலி மேற்கு - இராச பாதையில் நேற்று மாலை இடம்பெற்ற இந்த விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தனபாலசிங்கம் மகேஸ்வரி (வயது 72) என்பவரே உயிரிழந்தார்.

சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது, வீதியோரமாக அமைந்திருந்த ஆலயத்தில் குறித்த பெண் பொங்கிக் கொண்டிருந்தார்.

11

# பௌத்த மயமாக்கல் திருமலையில் துரிதம்

### சுமந்திரன் எம். பி. குற்றச்சாட்டு



**திருகோணமலையை பௌத்த மாவட்டமாக மாற்றுகின்ற நீண்டகால திட்டம் தற்போது துரிதகதியில் இடம்பெறுகின்றது என்று இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.**

இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட பணிமனையில் நேற்று மக்கள் சந்திப்பு நடைபெற்றது. இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

திருகோணமலை மாவட்டத்தில் வெவ்வேறு பிரதேசங்களில் இருந்தும் மக்கள் இங்கே வருகை தந்து தங்களுடைய பல பிரச்சினைகளை எமக்கு தெரியப்படுத்தியிருக் கிறார்கள்

இதில் பிரதானமான பிரச்சினையாக நில அபகரிப்பு தொடர்பிலேயே பல குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. மூதூர் கங்குவேலி குளத்தை ஆக்கிரமித்து அந்தக் குளத்தை நம்பி விவசாயம் செய்கின்ற தமிழ், முஸ்லிம் மக்களின் விவசாய செய்கையை குழப்பும் நோக்கில் குளத்தில் காணப்பட்ட நீரை வெளியேற்றி குளத்துக்குள்ளேயே வேற்று இனத்தவர்கள் வருகை தந்து விவசாயம் செய்து வருகின்றனர்.

இது தொடர்பில் பல முறைப்பாடுகள் எழுத்து மூலமாக கொடுக்கப் பட்டிருந்தும் எதுவித நடவடிக்கை எடுக்க வில்லை. நீர்ப்பாசன அதி காரிகளிடம் முறையிடு மாறு பொலிஸார் கூறு கின்றனர் என்றும் அவர் களிடத்தில் முறையிட் டும் எதுவித நடவடிக் கையும் எடுக்கவில்லை யெனவும் அவர்

11



விஜயதசமி தினமான நேற்று நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் மாணம்பூ திருவிழாவின் காட்சி...!

## மலேசிய விபத்தில் இலங்கையர் பலி!

கோலாலம்பூர், ஒக். 25

மலேசியாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கையைச் சேர்ந்த இருவர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மலேசியாவின் கோலாலம்பூரில் இலங்கையை சேர்ந்த தம்பதியினர் ஓட்டிச் சென்ற கார் மற்றுமொரு காருடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் தம்பதியர் உயிரிழந்தனர். அத்துடன், காரில் இருந்த அவர்களது மகளுக்கு காயம் ஏதும் ஏற்பட வில்லை.

இந்த விபத்தில் உயிரிழந்த பெண்ணுக்கு 33 வயது எனவும்

11

## முறிகண்டி பிள்ளையார் ஆலய வழக்கு நீதிமன்றால் தள்ளுபடி

முல்லைத்தீவு, ஒக். 25

திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலய உரிமை தொடர்பாக 12 வருடமாக இடம்பெற்ற வழக்கு நேற்று உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலயம் 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுற்றதும் சமய கலாசார அலுவல்கள்

11

## கொன்று புதைக்கப்பட்ட நிலையில் இளம்குடும்ப பெண் சடலமாக மீட்பு

### முல்லைத்தீவில் கொடூரம்; சந்தேகத்தில் கணவர் கைது

முல்லைத்தீவு, ஒக். 25

இளம் குடும்பப் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டு புதைக் கப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட் டார். இந்த சம்பவத்தில் பெண்ணின் கணவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

முல்லைத்தீவு - நீரா விப்பிட்டி கிராமத்தி லேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், புதுக்குடியிருப்பு 10ஆம் வட்டாரத்தை சேர்ந்த கீதா (வயது -23) என்ற பெண்ணே சடல மாக மீட்கப்பட்டார்.

சம்பவம் குறித்து மேலும் அறிய வருவ தாவது,

அண்மையில் திரு மண வாழ்வில் இணைந்த இவர்கள் முல்லைத்தீவு நீராவிப்பிட்டி கிழக்கில் வீடு ஒன்றில் வாடகைக்கு தங்கியிருந்தனர்.

கொல்லப் பட்ட பெண்

11

## எம். பிக்கள் மீது ஒழுக்காற்று: சுயாதீன மேற்பார்வை குழுவை அமைக்க அமைச்சரவை அனுமதி!

கொழும்பு, ஒக். 25

சுயாதீன மேற்பார்வைக்குழுவை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்களின் நடத்தைகள் தொடர்பில் கண்கா ணிக்கும் சுயாதீன மேற்பார்வைக்குழுவை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர்களின் நடத்தை கள் தொடர்பில் கண்காணிக்கும் சுயாதீன மேற்பார் வைக் குழுவை நிறுவுவதன் அவசியத்தை உலகின் பல நாடுகள் கண்டறிந்துள்ளதாகவும் அவ்வாறே இலங்கையிலும் அதன் அவசியம் உணரப்பட் டதால் அது தொடர்பில் கோரிக்கை

11

## இப்படியும் நடக்கிறது

நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் பற்றி நேற்றைய தினம் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

இந்தப் பத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்திருந்த கருத்து ஒன்று தொடர்பாகவும் குறிப்பிட்டிருந்தேன்.

அதிகாலை எங்களது பத்திரிகையின் மின்பதிப்பு எமது 'வட்ஸ்அப்' குறுப்பில் பதிவேற்றம் செய்யப்பட்ட போது லண்டனில் நேற்று முன்தினம் இரவு பத்துமணி. அதனால் நமது அதிகாலை நேரத்திலேயே பத்திரிகையைப் படித்துவிட்டு, நண்பரும் சமூக அக்கறை கொண்டவருமான 'அல்லை சிறி' ஒரு குறுந்தகவல் அனுப்பியிருந்தார்.

'சுரேசின் அறிக்கைபற்றி நீங்கள் எழுதியிருந்தீர்கள். இரண்டாவது சுற்றிலும் 51 வீதம் எவருக்கும் கிடைக்காதென்று, இரண்டாவது சுற்றில் இருவர் மட்டும் போட்டியிடும்போது வென்றவர் 50 வீதத்துக்கு மேல்தானே எடுத்திருப்பார். இலங்கையில் ஜனாதிபதி தேர்தலில் இரண்டாவது விருப்பு வாக்குமுறை உள்ளது'.

அவரது இந்த தகவல் அவருக்கு ஜனாதிபதி தேர்தல் எப்படி முடிவுகள் கணக்கிடப்படுவது என்பது தெரிந்திருக்கவில்லை என்பதை புலப்படுத்தியது.

அதைவிட முக்கியமானது, ஜனாதிபதி தேர்தலில் ஐம்பத்தியொரு வீதமான வாக்குகளை பெறவேண்டும் என்பதல்ல. ஐம்பது வீதமான வாக்குகளைவிட ஒரு வாக்கு அதிகமானதாகப் பெற்றாலும், அவர் முதலாவது சுற்றிலேயே வெற்றிபெற்றுவிடுவார்.

அப்படி யாரும் அந்த இலக்கை அடையவில்லை என்றால் முதல் இரண்டு இடங்களையும் பெற்றுள்ள வேட்பாளர்களுக்கு இடையே போட்டி நடைபெறும். அவர்கள் இருவருக்கும் விழுந்த வாக்குச்சீட்டுக்களை தவிர்த்து மற்றைய வேட்பாளர்களின் வாக்குகளில் அந்த வேட்பாளரைத் தவிர்த்து முதலில் தெரிவான இரண்டு வேட்பாளர்களில் யாருக்காவது இரண்டாவது விருப்பு வாக்கு விழுந்திருக்கிறதா என்று பார்க்கப்பட்டு, அவை அந்த அந்த வேட்பாளரின் வாக்குகளோடு சேர்க்கப்படும். உதாரணத்துக்கு முதல் இரண்டு இடங்களில் ரணிலும் சஜித்தும் வந்திருந்தால், மூன்றாவது இடத்துக்கு வந்த வேட்பாளரின் வாக்குச்சீட்டுக்களில், இரண்டாவது தெரிவாக ரணிலும் மூன்றாவது தெரிவாக சஜித்தும் இருந்தால் அந்த வாக்கு ரணிலுக்கு சேர்க்கப்படும். அதிலும் தேர்தலில் எத்தனை வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள் என்பதைப் பொறுத்தே ஒருவர் எத்தனை விருப்பு வாக்குகளைப் போடலாம் என்பது தீர்மானிக்கப்படும். அப்படி மூன்றுக்கு மேற்பட்ட விருப்பு வாக்குகள் போடப்படலாம் என்றால், அந்த வாக்குகளில் முதல் இருவரில் யாருக்கு முதலில் போடப்பட்டிருக்கின்றது என்பது பார்க்கப்பட்டு, அவர்களுக்கு சேர்க்கப்படும். இப்படி மற்றைய அனைவரின் வாக்குகளிலும் உள்ள விருப்பு வாக்குகள் சேர்க்கப்பட்ட பின்னரும் யாரும் ஐம்பது வீதத்திலும் அதிகம் எடுக்காவிட்டால், யார் அதி கூடிய வாக்குகளைப் பெற்றிருக்கிறாரோ அவரே வெற்றிபெற்றவராக அறிவிக்கப்படுவார்.

இனி நாம் சொல்ல வந்த விடயத்திற்கு வருவோம்.

மேலேயுள்ள விடயங்களை நண்பருக்கு வட்ஸ்அப்பில் அழைப்பெடுத்து விளக்கிய பின்னர் அவர் கேட்டார், 'அப்படியொரு நிலை வருகின்றபோது தமிழ் பொது வேட்பாளர் போட்டியிடுவதால் நமக்கு என்ன பயன் ஏற்படப்போகின்றது' என்று.

நல்ல கேள்விதான். நான் சொன்னேன், 'முதலில் இந்த தேர்தலை நமது மக்கள் தமது தீர்வாக என்ன கேட்கிறார்கள் என்பதை ஒரு சர்வஜன வாக்கெடுப்பு போல நடத்திக் காட்டலாம். அந்த வேட்பாளருக்கு வாக்களிப்பதன் மூலம் நாம் ஒரு சமஷ்டிக் கட்டமைப்புள்ள தீர்வு ஒன்றையே வேண்டி நிற்கிறோம் என்று முழு உலகுக்கும் மீண்டும் ஒரு முறை அழுத்திச் சொல்லலாம்.

அடுத்தது, எங்கள் மக்களிடம் அவர்களின் விருப்பு வாக்கை மற்றைய வேட்பாளர்களில் ஒருவருக்கு போடுங்கள் என்று சொல்லுவோம், அதற்காக நீங்கள் தமிழ் மக்களுக்கு என்ன செய்வீர்கள் என்பதை இப்போதே பகிரங்கமாக சொல்லவேண்டும். அதாவது அதற்கான மக்கள் ஆணையை நீங்கள் சிங்கள மக்களிடமிருந்தும் பெற வேண்டும் என்று நிபந்தனை விதிக்கலாம். அந்த நிபந்தனையை ஏற்றுக்கொள்கின்ற வேட்பாளருக்கு எமது மக்களை இரண்டாவது தெரிவாக வாக்களிக்குமாறு மக்களைக் கேட்கலாம். ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள் என்பதுபோல' என்றேன்.

உதாரணத்துக்கு முதல் இரண்டு இடங்களிலும் ரணிலும் சஜித்தும் இருக்கிறார்கள் என்று வைப்போம். இருவருக்குமிடையே ஒரு இலட்சமோ இரண்டு இலட்சமோதான் வித்தியாசம் இருக்குமெனில் எமது விருப்பு வாக்குகள் முடிவை தீர்மானிக்கின்ற வாக்குகளாக இருக்கும் அல்லவா?

இதனால்தான் நடக்கவிருக்கும் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் தமிழ் மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கவேண்டும் என்கிறோம்.!

-ஊர்க்குருவி.

## ஜனாதிபதியின் தேர்தல் அறிவிப்பின் மூலம் எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டு புஸ்வாணம்!

### ஐ. தே. கவின் ரங்கே பண்டார

கொழும்பு, ஒக். 25

அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் என்ற ஜனாதிபதியின் அறிவிப்பின் மூலம் தேர்தல் தொடர்பாக எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டு புஸ்வாணமாகியுள்ளது. எந்த தேர்தலுக்கும் முகம்கொடுப்பதற்கு ஐக்கிய தேசிய கட்சி ஒருபோதும் பின்வாங்கியதில்லை என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தேர்தலை நடத்தாமல் விடுவதற்கு ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் திட்டமிட்டு வருவதாக எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டு தெரிவித்து வந்ததுடன் பொய் பிரசாரங்களையும் மேற்கொண்டு வந்திருந்தனர்.

ஆனால், அரசமைப்பின் பிரகாரம் அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் என்பதுடன் 2025இல் பாராளுமன்ற தேர்தல் இடம்பெறும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசிய கட்சியின் விசேட சம்மேளனத்தின்போது பகிரங்கமாக அறிவிப்பு செய்தார். இதன் மூலம் எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுக்கள் தற்போது புஸ்வாணமாகியுள்ளது.

அதேநேரம் ஜனாதிபதியின் இந்த அறிவிப்பை எதிர்பார்க்காத சிலர் தற்போது தேவையற்ற விமர்சனங்களை செய்துவருகின்றனர். ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு மக்களை ஏமாற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்டது எனவும் தெரிவித்து வருகின்றனர். ஒருசில ஊடகங்களும் இந்த அறிவிப்பை நகைச்சுவையாக அறிவிப்பு செய்வதை காணக்கூடியதாக இருந்தது.

ஆனால், ரணில் விக்கிரமசிங்க ஒருபோதும் பொய் அறிவிப்புகளை செய்யமாட்டார். அவர் எப்போதும் உண்மையை உரைத்து வந்ததால் மக்களுக்கு அவரை புரிந்துகொள்ள முடியாமல் போயிருந்தது.

முன்னாள் ஜனாதிபதிகளை போன்று ரணில் விக்கிரமசிங்க குழந்தைகளை தூக்கி முத்தமிட்டு மக்களை ஏமாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. அதனால் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததுபோன்று உரிய காலத்தில் அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும். அதில், எந்த சந்தேகத்துக்கும் இடமில்லை.

அத்துடன், உள்ராட்சி மன்ற தேர்தலைப்போன்று ஜனாதிபதி தேர்தலையும் இறுதி நேரத்தில் நடத்தாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என சிலர் தெரிவித்து வருகின்றனர். நாடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக இருக்கும் பணத்தை செலவழிக்க முடியாது.

உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்தாமல் இருப்பதால் நாட்டுக்கு எந்த பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. ஆனால், ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்படாமல் விட்டால் அது நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும். அதனால்தான் தற்போது கையில் இருக்கும் பணத்தைக் கொண்டு நாட்டுக்கு முக்கியமான தேர்தலுக்கு செலவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது - என்றார். (ஐ)

## தண்ணீர் கட்டணத்துக்கும் வருகின்றது விலை சூத்திரம்

கொழும்பு, ஒக். 25

நீர் கட்டணத்தில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையால் விலை சூத்திரம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

2024 ஜனவரி முதல் அதனை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த ஒகஸ்ட் மாதம் அமைச்சரவை அனுமதியுடன் நீர் கட்டணம் அதிகரிக்கப்பட்டது. இதன் போது மிகவும் பாதிக்கப்படக்கூடிய சமூகத்தினருக்கான கட்டணங்கள் அதிகரிக்கப்படவில்லை.



வறுமையான மக்கள் மத்தியில் எனது வாக்கு வங்கியை அதிகரித்துக் கொள்வதற்காகவே நான் இவ்வாறு செயல்பட்டேன் என்று சிலர் என்மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

ஆனால், நீர் வழங்கல் என்பது தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் கீழ் உள்ளடங்குகின்றது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். இதில் பெருந்தோட்ட மக்கள் உள்ளடங்கவில்லை.

ஒகஸ்டில் நீர் கட்டணம் அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மீண்டும் கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனை எதுவும் அமைச்சரவையில் முன்வைக்கப்படவில்லை.

2024 ஜனவரியில் நீர் கட்டண திருத்தம் தொடர்பில் விலை சூத்திரமொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது. தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையால் இந்த சூத்திரத்துக்கான முதலாவது வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏனைய தரப்பினரது ஆலோசனை பெற்று இந்த விலை சூத்திரம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

நுகர்வோருக்கு நிலையான மற்றும் நியாயமான கட்டணத்தில் நீரை விநியோகிப்பதற்காக பொது ஆலோசனைகள் மற்றும் கணிப்புகளை தொடங்கும் பணியில் தற்போது ஈடுபட்டுள்ளோம். வேறு எந்த வகையிலும் மீண்டும் நீர் கட்டணத்தை அதிகரிக்க எதிர்பார்க்கவில்லை - என்றார். (ஐ)

## சொற்பொழிவு!

யாழ்ப்பாணம், ஒக். 25

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வாராந்த பெரியபுராண சிறப்பு சொற்பொழிவு - தொடர் 29 (இடங்கழி நாயனார்) நடைபெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆனைக்கோட்டை - சாவல்கட்டு - அந்திக்குழி ஞான வைரவர் காளி அம்பாள் ஆலய பிரதான மண்டபத்தில் இந்த சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

சேக்கிழார் பெருமானின் குருபூசையை தொடர்ந்து சொற்பொழிவை இளம் சைவப்புலவர் க. கயிலை வாசன் "திருநீற்று நெறி ஓங்க அரசாட்சி செய்த நாயனார்"

## டெங்கு பரவல் அதிகரிப்பு

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

இந்த ஆண்டு இதுவரையான காலப்பகுதியில் டெங்கு நோயினால் 39 மரணங்களும் 66,500 நோயாளர்களும் பதிவாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈழநாடு
Eelanadu 25.10.2023 புதன்கிழமை ඊළනාඩු
சோபகிருது வருடம், ஐப்பசி 08
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.
E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# உருத்திரகுமாரனின் தவறான அணுகுமுறை

உருத்திரகுமாரன் தலைமையிலான நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் எனப்படும் புலம்பெயர் அமைப்பு தமிழ்நாட்டில் 'மலையகம் 200' என்னும் தலைப்பில் நிகழ்வொன்றை ஏற்பாடு செய்வதற்கு முயற்சித்து, பின்னர் அந்த நிகழ்வுக்கு தமிழ் நாடு அரசாங்கம் தடைவித்திருந்தது. இதனை தொடர்ந்து, உருத்திரகுமாரன் தமிழ்நாடு அரசாங்கத்தை கண்டித்து அறிக்கை விடுத்திருப்பதுடன் இந்தியாவில் கருத்துச் சுதந்திரம் மறுக்கப்படுவதாகவும் அதனை எதிர்த்து சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் தெரிவித்திருக்கின்றார். இது வெந்த சிரங்கில் வேல் பாய்ச்சுவதற்கு ஒப்பானது. தமிழ் மக்களுக்கு சாதகமாக இருப்பவர்களை எதிரிகளாக்கும் செயல்பாடுகளால் தாயக மக்களுக்கு எந்தவொரு நன்மையும் ஏற்படப் போவதில்லை.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் எனப்படும் புலம்பெயர் அமைப்பானது விடுதலைப் புலிகளின் வீழ்சிக்கு பின்னர், அவர்களின் கொள்கை நிலைப்பாட்டை ஜனநாயக வழியில் அடையப் போவதாக கூறிவருகின்றது. அந்த அடிப்படையிலேயே அறிக்கைகளை வெளியிட்டுவருகின்றது. இலங்கையை துண்டாக்க வேண்டுமென்னும் நிலைப்பாட்டை கொண்ட புலம்பெயர் அமைப்பொன்று தமிழ்நாட்டுக்குள் நிகழ்வுகளை நடத்துவதை தமிழ்நாடு அரசாங்கம் அனுமதிக்காது. அவ்வாறு அனுமதித்தால், அது தமிழ்நாட்டு அரசாங்கத்துக்கும் மத்திய அரசாங்கத்துக்கும் இடையில் நெருக்கடிகளை ஏற்படுத்தும்.

பாதுகாப்பு விடயங்களில் தமிழ்நாடு தவறிழைப்பதாக மத்திய அரசு குற்றம்சாட்டுவதற்கான நிலைமை ஏற்படும். இந்த நிலைமைகளை கருத்தில் கொண்டே தமிழ்நாட்டு அரசாங்கமானது குறித்த நிகழ்வுக்கான அனுமதியை மறுத்திருக்கின்றது. அதேவேளை, நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்துக்காக இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தவர்கள் ஆளும் பாரதிய ஜனதா அரசாங்கத்துக்கு எதிராக செயல்பட்டு வருபவர்கள். இந்த விடயத்தையும் தமிழ்நாடு அரசாங்கம் கருத்தில் கொண்டிருக்கின்றது. தமிழ்நாடு அரசாங்கத்தின் அணுகுமுறையில் விடயத்தை தவறென்று கூற முடியாது. ஏனெனில், மத்திய அரசுடன் நெருக்கடிகளை ஏற்படுத்தக்கூடிய, பாதுகாப்பு விடயங்களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகளை தமிழ்நாட்டால் அனுமதிக்க முடியாது. இதனை உருத்திரகுமாரன் தலைமையிலான அணியினர் புரிந்துகொண்டிருக்க வேண்டும்.

மேற்குலக நாடுகள் போன்று, கருத்துச் சுதந்திரம் என்னும் பெயரில் அனைத்து விடயங்களையும் அனுமதிக்கும் நடைமுறை இந்தியாவில் இல்லை. அதேவேளை இலங்கையில் தடை செய்யப்பட்டிருக்கும் புலம்பெயர் அமைப்புகள் சுதந்திரமாக தமிழ்நாட்டில் செயல்படுவதை - ஓர் இராஜதந்திர பிரச்னையாகவும் இலங்கையால் மாற்றியமைக்க முடியும். இந்த விடயங்களையும் தமிழ்நாட்டு அரசாங்கம் கருத்தில் கொண்டிருக்கும்.

இவ்வாறான விடயங்களின்போது, தமிழ்நாட்டு அரசாங்கத்துக்கு எதிராக அறிக்கை வெளியிடுவதில் முதிர்ச்சியுடன் நடந்துகொள்ள வேண்டும். பொறுப்பற்ற வகையில் செயல்படுவதானது, ஈழ - தமிழக உறவுகளை பாதிக்கும். ஆளும் திராவிட முன்னேற்றம் கழகத்துடன் தேவையற்ற முரண்பாடுகளை தோற்றுவிக்கும். அத்துடன் தமிழ்நாட்டுடன் நல்லுறவுகளை கொண்டிருப்பவர்களுக்கு தேவையற்ற சங்கடங்களை ஏற்படுத்தும். இவ்வாறான விடயங்களின் போது, தமிழ் தேசிய அரசியல்வாதிகள் மதில் மேல் பூனைகள் போன்றிருக்காமல், விடயங்களை கண்டிக்க வேண்டும். களத்திலுள்ள கட்சிகள் தெளிவற்ற நிலைப்பாடுகளில் இருப்பதால்தான் இவ்வாறான செயல்பாடுகள் இடம் பெறுகின்றன.

# மக்கள் சேவைக்காக கம்சநாதனுக்கு தமிழ் எழில் விருது வழங்கிக் கௌரவம்



கிளிநொச்சி, ஒக். 25

கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் செயலாளரான க. கம்சநாதன் ஆற்றிய மக்கள் சேவைக்காக கிளிநொச்சி தமிழ் சங்கத்தால் தமிழ் எழில் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

கிளிநொச்சி மாவட்ட தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டில் திருக்குறள் விழாவும் மாணாக்கர்களுக்கான பரிசளிப்பும் மக்கள் சேவையாற்றியவர்களுக்கான நன்மதிப்பு வழங்கல் நிகழ்வும் கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் வெகு விமரிசையாக அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் செயலாளராக சிறப்பாக கடமையாற்றியமைக்காக க. கம்சநாதன் கௌரவிக்கப்பட்டு, அவர் ஆற்றிய மக்கள் தொண்டுக்காக தமிழ் எழில் - மக்கள் மாமணி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

கம்சநாதன் தற்போது வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச சபையின் செயலாளராக பணியாற்றும் இதேசமயம் பருத்தித்துறை பிரதேச சபையின் மேலதிக செயலாளராகவும் பணியாற்றுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# சட்டவிரோத கடற்தொழில் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதில் அதிகாரிகள் அசமந்தம்!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விசனம்

யாழ்ப்பாணம், ஒக். 25

ஒரு சில கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளின் அசமந்த நடவடிக்கைகள் காரணமாகவே சட்டவிரோத கடல்தொழில் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதில் நெருக்கடி நிலைமை தொடர்வதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கடற்படையினர் மற்றும் தொழிலாளர்களினாலும் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன. இவ்வாறானவர்களின் செயல்பாடுகளை எவ்விதத்திலும் அனுமதிக்க முடியாது எனவும் அவர் கூறினார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு நேற்று காலை விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாவட்டத்தில் கடற்றொழில் அமைச்சினால் முன்னெடுக்கவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் மற்றும் கடல்தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து விளக்கம் அளித்து கலந்துரையாடிய வேளையிலேயே மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

சாக்குபோக்கு காரணங்கள் தெரிவிப்பதை விடுத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நடைமுறையில் இருக்கின்ற சட்டவிதிகளை நடைமுறைப்படுத்த முடியாதவர்கள் பணிகளில் இருந்து ஒதுங்கி வேறு துறைகளுக்கு செல்வதே சிறந்த வழிமுறை - என்றார்.

(அ)

# சுக்கிரவார சிறப்பு சொற்பொழிவு


யாழ்ப்பாணம், ஒக். 25

நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெறும் வாராந்த சுக்கிர வார சிறப்பு சொற்பொழிவு ஆலயத்தின் சண்முக விலாச மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கத்தின் தலைமையுரையை தொடர்ந்து சிறப்புச்சொற்பொழிவை சைவப்புலவர் சி. கா. கமலநாதன், "அர்த்தநாரீஸ்வரர் வடிவம் உணர்த்தும் வாழ்வியல்" என்ற தலைப்பில் ஆற்றுவார். சொற்பொழிவின் நிறைவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும்.

(ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**

உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். மனம் விட்டு பேசுவீர்கள். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். அந்தஸ்து உயரும்நாள்.

**இடபம்**

கணவன்- மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புவியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**மிதுனம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் சில செலவுகளைக் குறைக்க முடியாமல் திணறுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் விரயம்வரும். அதிகாரிகளை பகைத்துக்கொள்ளாதீர்கள். பொறுமையான நாள்.

**கடகம்**

கடினமான காரியங்களை எளிதாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். திறமைகள் வெளிப்படும் நாள்.

**சிம்மம்**

சமயோசிதமாகவும் சாதுர்யமாகப் பேசி சாதிப்பீர்கள். பிள்ளைகளால் புகழ் கௌரவம் உயரும். உத்தியோகத்தில் உயரதிகாரி சிலசூட்சுமங்களை சொல்லித் தருவார். அமோகமான நாள்.

**கன்னி**

குடுமகுடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். புதிய வாகனம் வாங்குவீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். புதிய சிக்கல்கள் தீரும். புதுமை படைக்கும் நாள்.

**துலாம்**

பிரியமானவர்களின் சந்திப்புநிகழும். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**விருட்சிகம்**

குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள்.வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். தைரியம் கூடும் நாள்.

**தனுசு**

சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தொடர்ச்சி. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**மகரம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே முடிப்பது நல்லது. ஈகோ பிரச்னை வந்து நீங்கும். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

**கும்பம்**

விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். சக ஊழியருடன் விவாதம் வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மீனம்**

திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். புதுத் தொழில் முயற்சி வெற்றி அடையும். சக ஊழியர்கள் முக்கியத்துவம் தருவார்கள். சாதிக்கும் நாள்.

# இலங்கை அரசின் தூண்டுதலிலேயே தமிழக மீனவர்களின்மீது தாக்குதல்

## அன்புமணி ராமதாஸ் சாடல்



சிவகாசி, ஒக். 25

**இலங்கை அரசின் தூண்டுதலில் கடற்கொள்ளையர்கள் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துகின்றனர். மீனவர்கள் விஷயத்தில் மத்திய, மாநில அரசுகள் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும் என்று பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.**

கன்னியாகுமரியில் இருந்த ஆளும் கட்சியினர் உதவியுடன் கனிம வளங்கள் அள்ளப்பட்டு கேரளாவுக்கு கடத்தப்படுகிறது. இதை அரசு தடுக்கவில்லை என்றால் எனது தலைமையில் மிகப்பெரிய போராட்டம் நடத்தப்படும்.

தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பை தமிழக அரசு நடத்த வேண்டும். கடந்த சில நாட்களுக்கு முன் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில், சாதிவாரி கணக்கெடுப்பு எடுக்க மத்திய அரசுக்கு தான் அதிகாரம் உள்ளது. அதனால் வருகின்ற மக்கள் தொகை கணக்கெடுப்பு உடன் சாதிவாரி கணக்கெடுப்பையும் கூடுதலாக நடத்த வேண்டும் என முதல்வர் ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழகத்தில் மட்டும்தான் 68 சதவீதம் இடஒதுக்கீடு உள்ளது. இதை பாதுகாக்க தமிழக அரசு சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும். 69 சதவீத இடஒதுக்கீடு தொடர்பான வழக்கில் தமிழக அரசு சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என கடந்த 2012ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கர்நாடகா, ஒடிசாவில் மாநில அரசு சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தி வருகிறது. ஆந்திரா, தெலுங்கானா, ராஜஸ்தான் மாநில அரசுகள் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்போவதாக அறிவித்துள்ளன. ஆனால் சமூக நீதி பேசும் தி. மு. க. சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த மறுக்கிறது. மாநில சுயாட்சி பேசும் திமுக சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவதில் அதிகாரத்தை தட்டிக் கழிக்கிறது. சாதிவாரி கணக்கெடுப்பு என்பது வெறும் எண்ணிக்கை மட்டும் அல்ல. சமூக நிலை, பொருளாதாரம், கல்வி, வேளாண்மை உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட குறியீடுகளை கணக்கெடுக்க வேண்டும். தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த முதல்வர் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் - என்றார்.

(ஐ)

# ஒடிசா மாநில அமைச்சராக தமிழ்நாட்டு தமிழர் நியமனம்!

சென்னை, ஒக். 25

ஒடிசா முதல்வரின் தனி செயலாளர் பொறுப்பில் இருந்து விருப்ப ஓய்வு பெற்ற தமிழகத்தைச்சேர்ந்த வி. கே. பாண்டியன் அந்த மாநிலத்தின் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக ஒடிசா மாநில கூடுதல் தலைமைச் செயலாளர் சுரேந்திர குமார் வெளியிட்டுள்ள அரசு உத்தரவில், “மாற்றத்துக்கான முயற்சிகளை மேற்கொள்ளும் 5ரி திட்டம் மற்றும் நபின் ஒடிசாவின் தலைவராக வி. கே. பாண்டியன் நியமிக்கப்படுகிறார். இந்த பதவி அமைச்சரவை அமைச்சருக்கு இணையான பதவி. இனி, இவர் முதல்வருக்குக் கீழ் நேரடியாக பணியாற்றுவார்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக்கின் தனி செயலாளரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவருமான வி. கார்த்திகேய பாண்டியன் ஐ. ஏ. எஸ். தனது பணியிலிருந்து நேற்றுமுன்தினம் விருப்ப ஓய்வு பெற்றார். இவர், வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். 2002 முதல் பல பணிகளில் இருந்த அவர் 2011ஆம் ஆண்டு முதல் முதல்வர் நவீன் பட்நாயக்கின் தனிச் செயலாளராகவும், அவரது வலது கரமாகவும் இருந்து வருகிறார்.

ஒடிசா அரசாங்கத்திலும், ஆளும் கட்சியான பிஜூஜனதா தள நிர்வாகிகள் மத்தியிலும் நவீன் பட்நாயக்குக்கு அடுத்த இடத்தில் மிகவும் செல்வாக்கு மிகுந்த நபராக கார்த்திகேய பாண்டியன் வலம் வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# வாக்குறுதிகளை நிறைவேற்றியதாக முதல்வர் ஸ்டாலின் பொய்கூறுகிறார்

## எதிர்க்கட்சி தலைவர் பழனிசாமி

சென்னை, ஒக். 25

“29 மாத கால தி. மு. க. ஆட்சியில், தமிழக மக்களுக்கு கொண்டுவரப்பட்ட திட்டங்கள் என்ன என்று கேட்டால், தி. மு. கவின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்ட வாக்குறுதிகளை 100 சதவீதம் நிறைவேற்றி விட்டதாக தமிழக முதல்வர் மக்களிடையே பொய் பேசுகிறார். ஏனெனில், 29 மாத கால ஆட்சியில் தமிழக மக்களின் நலனுக்காக ஸ்டாலின் எந்தத் திட்டத்தையும் அறிவிக்கவில்லை - செயல்படுத்தவில்லை” என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தி. மு. க. தலைவர், பொம்மை முதல்வர் ஸ்டாலின், அவரது கட்சியினரிடம் வாக்காளர்களை சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தல் உள்ளிட்ட பணிகளைப் பற்றி பேசுவதில் எனக்கு ஆட்சேபனையில்லை. ஆனால், எதைப் பற்றி பேச வேண்டுமோ, அதைப் பற்றி பேசாமல், அவருடைய பேச்சில், பாதிக்கும் மேல் என்னைப் பற்றி பேசியதில் இருந்தே, அவருக்கு தோல்வி பயம் ஏற்பட்டுள்ளது என்பது நன்கு விளங்குகிறது.

மகளிர் உரிமைத் தொகை வழங்கும் விழாவில் பேசும்போது, 100 சதவீத வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட்டதாகத் தம்பட்டம் அடித்தார். அதனால் தான், நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளைப் பட்டியலிட்டு அவற்றின் நிலை என்ன என்று நான் கேட்டேன். மேலும், கடந்த 29 மாத கால தி. மு. க. ஆட்சியில் தமிழக மக்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், அவர்களின் பாதிப்புகளை நீக்க திமுக அரசு மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை சட்டமன்றத்திலும் ஊடகங்களிலும் கூறி வருகிறேன்.

குடும்ப ஆட்சி தி. மு. க. என்று ஸ்டாலின் ஒத்துக்கொண்டதற்கு நன்றி. முதலில் கருணாநிதி, பிறகு ஸ்டாலின், தற்போது உதயநிதி என்று ஒரு குடும்பத்தின் ஆட்சிதான் தமிழகத்தில் நடைபெறுகிறது. தலைவனைப் போலவே தி. மு. க. மூத்த அமைச்சர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்கள், அவர்களது குடும்ப வாரிசுகள் தவிர, மாவட்ட அளவில் கூட வேறு யாரும் தி. மு. கவில் முன்னுக்கு வரமுடியாது. தி. மு. கவில் மன்னர் ஆட்சி உள்ளது என்பதை வெளிப்படையாகவே ஒத்துக்கொண்டுள்ளார் ஸ்டாலின் - என்றார்.

(ஐ)

# பண பலத்தை திரட்டி அரசு தேர்தலுக்கு தயாராகின்றது

## அநுரகுமார திஸாநாயக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 25

**"மக்களை அடக்கி, சமூக வலைத்தளங்களை ஒடுக்கி, பண பலத்தை திரட்டியே தற்போதைய அரசு தேர்தலுக்கு தயாராகின்றது. ஆனால் மாபெரும் சக்தியாக கருதப்படுகின்ற மக்கள் சக்தி எங்கள் பக்கமே உள்ளது." - என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

**இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-**

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் நடத்தப்படும் என ஜனாதிபதி அறிவித்துள்ளார். அவர் சொன்னாலும், சொல்லாவிட்டாலும் அடுத்த வருடம் தேர்தலை கட்டாயம் நடத்தியாக வேண்டும். இத்தேர்தலை எதிர்கொள்வதற்காக அரசு பண பலத்தை திரட்டிவருகின்றது. கோதுமைமா நிறுவனத்துக்கு இலாபம் உழைக்க வழிவிட்டு அதன்மூலம் பணம் திரட்டப்படுகின்றது, மில்கோ நிறுவனத்தை விற்பனை செய்து அதன்மூலமும் நிதி திரட்டப்படுகின்றது, கிழக்கில் முக்கியமான இடங்கள் வழங்கப்பட்டு அதன்மூலமும் நிதி திரட்டப்படுகின்றது. மகிந்தவுக்கு பஸில் எப்படியோ அதுபோல்தான் ரணிலுக்கு சாகல ரத்னாயக்க, அவர் தற்போது பணம் திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

மறுபுறத்தில் சமூக வலைத்தளங்களை கட்டுப்படுத்துவதற்கு சட்டமூலங்களை கொண்டுவந்து தேர்தலுக்கு தயாராகின்றனர். அடுத்து, மக்கள் வீதிக்கு இறங்கினால் அது தேர்தலில் பின்னடைவாக அமையும். எனவே, அதனை கட்டுப்படுத்துவதற்கு புதிய பயங்கரவாத தடைச்சட்டமூலத்தை முன்வைத்து, தேர்தலுக்கு தயாராகின்றனர். இதன்மூலம் மக்களை ஒடுக்குவதற்கான முயற்சி எடுக்கப்படுகின்றது.

மக்கள் மத்திக்கு வந்து அவர்கள் (ஆட்சியாளர்கள்) தேர்தலுக்கு தயாராகவில்லை. மாறாக பணம் திரட்டியும், மக்களை ஒடுக்கியும், சட்டங்களை கொண்டுவந்து அடக்கியுமே தேர்தலுக்கு தயாராகின்றனர்.

பணபலத்தில் அவர்களுக்கு பின்னால்தான் நாம் நிற்கின்றோம். அவர்களுக்கு ஊடக பலமும் உள்ளது. அரச பலமும் உள்ளது . தேர்தல் வெற்றிக்கு அவற்றை நிச்சயம் பயன்படுத்துவார்கள், ஆனால் இவற்றை எல்லாம்விட மேலான மக்கள் பலம் எம்மிடம் உள்ளது-என்றார். (அ)

# யாழில் மதுபோதையில் பஸ்ஸை செலுத்திய இ.போ.ச சாரதியின் அனுமதிப்பத்திரம் ரத்து!

யாழ்ப்பாணம், ஒக். 25

மதுபோதையில் பேருந்து செலுத்திய இ.போ.ச சாரதியின் சாரதி அனுமதிப்பத்திரம் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தினால் இரத்து செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2ஆம் திகதி ஊர்காவற்றுறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த இ.போ.ச பஸ்ஸை வழிமறித்து சோதனையிட்டபோது, சாரதி மதுபோதையிலிருந்தமை தெரியவந்தது.

அவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு, நேற்று முன்தினம் அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.

சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து, அவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன், அவரது சாரதி அனுமதிப்பத்திரம் ஒரு வருடத்துக்கு இரத்து செய்யப்பட்டது. (அ)

# செந்திலும் சாணக்கியனும் இணைந்து கிழக்கில் சூழ்ச்சி

## அம்பிட்டிய சுமண தேரர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 25

"கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானும், நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனும் இணைந்தே கிழக்கில் சூழ்ச்சி திட்டங்களை முன்னெடுக்கின்றனர்." - என்று அம்பிட்டிய சுமன ரத்ன தேரர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் கூட்டமைப்பினருக்கு சார்பாக செயற்படுகின்றார் எனவும் தேரர் குறிப்பிட்டார்.

அதேவேளை, கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் சிங்கள மக்களை அச்சுறுத்தும் வகையில் சாணக்கியன் அறிவிப்புகளை விடுத்து வருகின்றார் எனவும் தேரர் குற்றஞ்சாட்டினார்.

அத்துடன், மனித உரிமை ஆணைக்குழுவிலும் தேரர் முறைப்பாடு செய்துள்ளார். (அ)

# கடன் மோசடியில் ஈடுபட்ட ஓய்வுபெற்ற அதிபர் கைது!

கொழும்பு, ஒக். 25

ஓய்வு பெற்ற பெண் அதிபர் ஒருவர் அரச வங்கியின் நான்கு கிளைகளில் இருந்து 26 சந்தர்ப்பங்களில் 42 மில்லியன் ரூபாய்க்கு மேல் மோசடி செய்த குற்றச்சாட்டில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் (சிஐடி) பொது முறைப்பாடு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹிந்தகல பிரதேசத்தில் வசிக்கும் 69 வயதுடைய ஓய்வுபெற்ற அதிபரே கைதாகினார்.

இந்த கடன் திட்டம் ஆசிரியர்களுக்கு மட்டுமே கடன் வழங்குகிறது. விண்ணப்பதாரர் பணி புரியும் பாடசாலையின் அதிபரால் தொடர்புடைய ஆவணங்களின் சான்றளிக்கப்பட வேண்டும்.

இந்த ஓய்வுபெற்ற அதிபர் தற்போது அதிபராக கடமையாற்றுவதாக போலி முத்திரைகள் மற்றும் ஆவணங்களைத் தயாரித்துள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆசிரியர்களுக்கான பிரத்தியேகமான மேற்கண்ட சலுகைக் கடன் திட்டத்தின் கீழ் ஆசிரியர் அல்லாதவர்களுக்கு கடன் வசதிகளை ஏற்பாடு செய்ய இவர் போலி ஆவணங்களைப் பயன்படுத்தினார்.

ஓய்வு பெற்ற அதிபர் தயாரித்த போலி ஆவணங்களை சமர்ப்பித்து ஆசிரியர் அல்லாத 26 பேர் இவ்வாறு கடன் பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கடன் பெற்றவர்களிடம் ஓய்வு பெற்ற அதிபர் தரகுப் பணம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

மேலும் கடன் வாங்கிய 26 பேரும் முறையாக தவணை செலுத்தி வருவதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த மோசடியை சம்பந்தப்பட்ட வங்கியின் அதிகாரி கண்டுபிடித்தார். இது தொடர்பாக வங்கி சி.ஐ.டியிடம் முறைப்பாடு செய்துள்ளது. (அ)

# ரூ.4,000 மில்லியன் போதைப்பொருள் கடத்தலின் பின்னணியில் தமிழன்!

கொழும்பு, ஒக். 25

கடந்த ஞாயிற்றுக்கிழமை கடற்படை மற்றும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட கூட்டு நடவடிக்கையில், தெற்கு கடற்கரைக்கு அப்பால் உள்ள ஆழ்கடல் பகுதியில் கைப்பற்றப்பட்ட ரூ.4,000 மில்லியன் பெறுமதியான 212 கிலோ ஹெரோயின் மற்றும் கிரிஸ்டல் மெத்தாம்பெட்டமைன் (ஐஸ்) ஆகியவற்றை கடத்த முயன்றதன் பின்னணியில், தற்போது பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு போதைப்பொருள் கடத்தல்காரர்களே இருந்தனர் எனக் கூறப்படுகிறது.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ள 'தேவுந்தர தமிழ்' மற்றும் 'பாபோல் களு' ஆகிய இரு பாதாள உலகக் குற்றவாளிகள் இந்த கடத்தல் முயற்சியின் பின்னணியில் இருப்பதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த கடத்தல் முயற்சி தொடர்பில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவிற்கு முன்கூட்டியே கிடைத்த தகவலையடுத்து சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள



போதைப்பொருள் கடத்தல்காரர்கள் இருவரும் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தி போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட நீண்ட விசாரணையின் போது தகவல் வெளியாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்தின் தகவலின் படி, தேவுந்தர தமிழ், நாட்டில் போதைப்பொருள் கடத்தலில் முன்னணியில் உள்ளார்.

விசாரணையில், 1,000 கிலோ ஹெரோயின் மற்றும் ஐஸ் நிரப்பப்பட்ட கப்பலை பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு அருகில் உள்ள சர்வதேச கடல் எல்லைக்கு கொண்டு வந்த பாகிஸ்தான் கடத்தல்காரர்கள், இலங்கை கடத்தல்காரர்களிடம் ஒப்படைத்தது தெரிய வந்தது.

ஏனைய கடத்தல்காரர்களின் உத்தரவுக்கமைய எஞ்சிய போதைப் பொருட்கள் வேறு படகுகளில் ஏற்றப்பட்டதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் தெரியவந்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை கைப்பற்றப்பட்ட கப்பலை சோதனை செய்ததில், சுமார் 180 கிலோ 800 கிராம் எடையுள்ள 160 ஹெரோயின் பொதிகள் மற்றும் 31 கிலோ 550 கிராம் எடையுள்ள 28 கிரிஸ்டல் மெத்தாம்பெட்டமைன் (ஐஸ்) பொதிகள் இருந்தன. (அ)

# பயிர்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு

கொழும்பு, ஒக். 25

சீரற்ற காலநிலையால் போதியளவு நீரைப் பெற்றுக்கொடுக்க முடியாத காரணத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதேவேளை சீரற்ற காலநிலையால் சுமார் 58,770 ஏக்கர் நெல் மற்றும் ஏனைய பயிர்கள் சேதமடைந்துள்ளன. சுமார் 53,965 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கு விவசாய அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட யோசனையை அமைச்சரவை கவனத்தில் எடுத்தது.

அரசாங்கம் கடினமான நிதி நிலைமையை எதிர்கொண்டுள்ளபோதிலும், தற்போதைய பயிர்க் காப்புறுதித் திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்குத் தேவையான நிதியை ஒதுக்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (அ)

# பெரமுனவை எதிர்த்தால் ஆட்சியை கவிழ்ப்போம்!

## எஸ். பி. திஸாநாயக்க எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 25

பொதுஜன பெரமுனவுக்கு எதிராக செயற்பட்டால் அரசாங்கத்தை கவிழ்க்க முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ். பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் அனைத்து அமைச்சர்களும் நீக்கப்பட்டாலும் நீங்கள் காத்திருப்பதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாது என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதலளித்த அவர், இல்லை, இல்லை ஆட்சியைக் கவிழ்க்க முடியும். எம்மால் செய்யக்கூடிய பல விடயங்கள் உள்ளன. வரவு - செலவுத் திட்டத்தைத் தோற்கடிப்பதுடன் பல விடயங்களைச் செய்ய முடியும் என்று தெரிவித்தார். (அ)




**மேடம்**

உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். மனம் விட்டு பேசுவீர்கள். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். அந்தஸ்து உயரும்நாள்.

**இடபம்**

கணவன்- மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புவியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**மிதுனம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் சில செலவுகளைக் குறைக்க முடியாமல் திணறுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் விரயம்வரும். அதிகாரிகளை பகைத்துக்கொள்ளாதீர்கள். பொறுமையான நாள்.

**கடகம்**

கடினமான காரியங்களை எளிதாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். திறமைகள் வெளிப்படும் நாள்.

**சிம்மம்**

சமயோசிதமாகவும் சாதுர்யமாகப் பேசி சாதிப்பீர்கள். பிள்ளைகளால் புகழ் கௌரவம் உயரும். உத்தியோகத்தில் உயரதிகாரி சிலசூட்சுமங்களை சொல்லித் தருவார். அமோகமான நாள்.

**கன்னி**

குடுமகுடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். புதிய வாகனம் வாங்குவீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். புதிய சிக்கல்கள் தீரும். புதுமை படைக்கும் நாள்.

**துலாம்**

பிரியமானவர்களின் சந்திப்புநிகழும். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**விருட்சிகம்**

குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள்.வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். தைரியம் கூடும் நாள்.

**தனுசு**

சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தொடர்ச்சி. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**மகரம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே முடிப்பது நல்லது. ஈகோ பிரச்னை வந்து நீங்கும். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

**கும்பம்**

விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். சக ஊழியருடன் விவாதம் வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மீனம்**

திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். புதுத் தொழில் முயற்சி வெற்றி அடையும். சக ஊழியர்கள் முக்கியத்துவம் தருவார்கள். சாதிக்கும் நாள்.

# இலங்கை அரசின் தூண்டுதலிலேயே தமிழக மீனவர்களின்மீது தாக்குதல்

## அன்புமணி ராமதாஸ் சாடல்



சிவகாசி, ஒக். 25

**இலங்கை அரசின் தூண்டுதலில் கடற்கொள்ளையர்கள் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துகின்றனர். மீனவர்கள் விஷயத்தில் மத்திய, மாநில அரசுகள் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும் என்று பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.**

கன்னியாகுமரியில் இருந்த ஆளும் கட்சியினர் உதவியுடன் கனிம வளங்கள் அள்ளப்பட்டு கேரளாவுக்கு கடத்தப்படுகிறது. இதை அரசு தடுக்கவில்லை என்றால் எனது தலைமையில் மிகப்பெரிய போராட்டம் நடத்தப்படும்.

தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பை தமிழக அரசு நடத்த வேண்டும். கடந்த சில நாட்களுக்கு முன் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில், சாதிவாரி கணக்கெடுப்பு எடுக்க மத்திய அரசுக்கு தான் அதிகாரம் உள்ளது. அதனால் வருகின்ற மக்கள் தொகை கணக்கெடுப்பு உடன் சாதிவாரி கணக்கெடுப்பையும் கூடுதலாக நடத்த வேண்டும் என முதல்வர் ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழகத்தில் மட்டும்தான் 68 சதவீதம் இடஒதுக்கீடு உள்ளது. இதை பாதுகாக்க தமிழக அரசு சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும். 69 சதவீத இடஒதுக்கீடு தொடர்பான வழக்கில் தமிழக அரசு சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என கடந்த 2012ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கர்நாடகா, ஒடிசாவில் மாநில அரசு சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தி வருகிறது. ஆந்திரா, தெலுங்கானா, ராஜஸ்தான் மாநில அரசுகள் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்போவதாக அறிவித்துள்ளன. ஆனால் சமூக நீதி பேசும் தி. மு. க. சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த மறுக்கிறது. மாநில சுயாட்சி பேசும் திமுக சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவதில் அதிகாரத்தை தட்டிக் கழிக்கிறது. சாதிவாரி கணக்கெடுப்பு என்பது வெறும் எண்ணிக்கை மட்டும் அல்ல. சமூக நிலை, பொருளாதாரம், கல்வி, வேளாண்மை உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட குறியீடுகளை கணக்கெடுக்க வேண்டும். தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த முதல்வர் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் - என்றார்.

(ஐ)

# ஒடிசா மாநில அமைச்சராக தமிழ்நாட்டு தமிழர் நியமனம்!

சென்னை, ஒக். 25

ஒடிசா முதல்வரின் தனி செயலாளர் பொறுப்பில் இருந்து விருப்ப ஓய்வு பெற்ற தமிழகத்தைச்சேர்ந்த வி. கே. பாண்டியன் அந்த மாநிலத்தின் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக ஒடிசா மாநில கூடுதல் தலைமைச் செயலாளர் சுரேந்திர குமார் வெளியிட்டுள்ள அரசு உத்தரவில், “மாற்றத்துக்கான முயற்சிகளை மேற்கொள்ளும் 5ரி திட்டம் மற்றும் நபின் ஒடிசாவின் தலைவராக வி. கே. பாண்டியன் நியமிக்கப்படுகிறார். இந்த பதவி அமைச்சரவை அமைச்சருக்கு இணையான பதவி. இனி, இவர் முதல்வருக்குக் கீழ் நேரடியாக பணியாற்றுவார்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக்கின் தனி செயலாளரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவருமான வி. கார்த்திகேய பாண்டியன் ஐ. ஏ. எஸ். தனது பணியிலிருந்து நேற்றுமுன்தினம் விருப்ப ஓய்வு பெற்றார். இவர், வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். 2002 முதல் பல பணிகளில் இருந்த அவர் 2011ஆம் ஆண்டு முதல் முதல்வர் நவீன் பட்நாயக்கின் தனிச் செயலாளராகவும், அவரது வலது கரமாகவும் இருந்து வருகிறார்.

ஒடிசா அரசாங்கத்திலும், ஆளும் கட்சியான பிஜூஜனதா தள நிர்வாகிகள் மத்தியிலும் நவீன் பட்நாயக்குக்கு அடுத்த இடத்தில் மிகவும் செல்வாக்கு மிகுந்த நபராக கார்த்திகேய பாண்டியன் வலம் வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# வாக்குறுதிகளை நிறைவேற்றியதாக முதல்வர் ஸ்டாலின் பொய்கூறுகிறார்

## எதிர்க்கட்சி தலைவர் பழனிசாமி

சென்னை, ஒக். 25

“29 மாத கால தி. மு. க. ஆட்சியில், தமிழக மக்களுக்கு கொண்டுவரப்பட்ட திட்டங்கள் என்ன என்று கேட்டால், தி. மு. கவின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்ட வாக்குறுதிகளை 100 சதவீதம் நிறைவேற்றி விட்டதாக தமிழக முதல்வர் மக்களிடையே பொய் பேசுகிறார். ஏனெனில், 29 மாத கால ஆட்சியில் தமிழக மக்களின் நலனுக்காக ஸ்டாலின் எந்தத் திட்டத்தையும் அறிவிக்கவில்லை - செயல்படுத்தவில்லை” என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தி. மு. க. தலைவர், பொம்மை முதல்வர் ஸ்டாலின், அவரது கட்சியினரிடம் வாக்காளர்களை சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தல் உள்ளிட்ட பணிகளைப் பற்றி பேசுவதில் எனக்கு ஆட்சேபனையில்லை. ஆனால், எதைப் பற்றி பேச வேண்டுமோ, அதைப் பற்றி பேசாமல், அவருடைய பேச்சில், பாதிக்கும் மேல் என்னைப் பற்றி பேசியதில் இருந்தே, அவருக்கு தோல்வி பயம் ஏற்பட்டுள்ளது என்பது நன்கு விளங்குகிறது.

மகளிர் உரிமைத் தொகை வழங்கும் விழாவில் பேசும்போது, 100 சதவீத வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட்டதாகத் தம்பட்டம் அடித்தார். அதனால் தான், நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளைப் பட்டியலிட்டு அவற்றின் நிலை என்ன என்று நான் கேட்டேன். மேலும், கடந்த 29 மாத கால தி. மு. க. ஆட்சியில் தமிழக மக்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், அவர்களின் பாதிப்புகளை நீக்க திமுக அரசு மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை சட்டமன்றத்திலும் ஊடகங்களிலும் கூறி வருகிறேன்.

குடும்ப ஆட்சி தி. மு. க. என்று ஸ்டாலின் ஒத்துக்கொண்டதற்கு நன்றி. முதலில் கருணாநிதி, பிறகு ஸ்டாலின், தற்போது உதயநிதி என்று ஒரு குடும்பத்தின் ஆட்சிதான் தமிழகத்தில் நடைபெறுகிறது. தலைவனைப் போலவே தி. மு. க. மூத்த அமைச்சர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்கள், அவர்களது குடும்ப வாரிசுகள் தவிர, மாவட்ட அளவில் கூட வேறு யாரும் தி. மு. கவில் முன்னுக்கு வரமுடியாது. தி. மு. கவில் மன்னர் ஆட்சி உள்ளது என்பதை வெளிப்படையாகவே ஒத்துக்கொண்டுள்ளார் ஸ்டாலின் - என்றார்.

(ஐ)

# பண பலத்தை திரட்டி அரசு தேர்தலுக்கு தயாராகின்றது

## அநுரகுமார திஸாநாயக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 25

**“மக்களை அடக்கி, சமூக வலைத்தளங்களை ஒடுக்கி, பண பலத்தை திரட்டியே தற்போதைய அரசு தேர்தலுக்கு தயாராகின்றது. ஆனால் மாபெரும் சக்தியாக கருதப்படுகின்ற மக்கள் சக்தி எங்கள் பக்கமே உள்ளது.” - என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

**இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-**

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் நடத்தப்படும் என ஜனாதிபதி அறிவித்துள்ளார். அவர் சொன்னாலும், சொல்லாவிட்டாலும் அடுத்த வருடம் தேர்தலை கட்டாயம் நடத்தியாக வேண்டும். இத்தேர்தலை எதிர்கொள்வதற்காக அரசு பண பலத்தை திரட்டிவருகின்றது. கோதுமைமா நிறுவனத்துக்கு இலாபம் உழைக்க வழிவிட்டு அதன்மூலம் பணம் திரட்டப்படுகின்றது, மில்கோ நிறுவனத்தை விற்பனை செய்து அதன்மூலமும் நிதி திரட்டப்படுகின்றது, கிழக்கில் முக்கியமான இடங்கள் வழங்கப்பட்டு அதன்மூலமும் நிதி திரட்டப்படுகின்றது. மகிந்தவுக்கு பஸில் எப்படியோ அதுபோல்தான் ரணிலுக்கு சாகல ரத்னாயக்க, அவர் தற்போது பணம் திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

மறுபுறத்தில் சமூக வலைத்தளங்களை கட்டுப்படுத்துவதற்கு சட்டமூலங்களை கொண்டுவந்து தேர்தலுக்கு தயாராகின்றனர். அடுத்து, மக்கள் வீதிக்கு இறங்கினால் அது தேர்தலில் பின்னடைவாக அமையும். எனவே, அதனை கட்டுப்படுத்துவதற்கு புதிய பயங்கரவாத தடைச்சட்டமூலத்தை முன்வைத்து, தேர்தலுக்கு தயாராகின்றனர். இதன்மூலம் மக்களை ஒடுக்குவதற்கான முயற்சி எடுக்கப்படுகின்றது.

மக்கள் மத்திக்கு வந்து அவர்கள் (ஆட்சியாளர்கள்) தேர்தலுக்கு தயாராகவில்லை. மாறாக பணம் திரட்டியும், மக்களை ஒடுக்கியும், சட்டங்களை கொண்டுவந்து அடக்கியுமே தேர்தலுக்கு தயாராகின்றனர்.

பணபலத்தில் அவர்களுக்கு பின்னால்தான் நாம் நிற்கின்றோம். அவர்களுக்கு ஊடக பலமும் உள்ளது. அரச பலமும் உள்ளது . தேர்தல் வெற்றிக்கு அவற்றை நிச்சயம் பயன்படுத்துவார்கள், ஆனால் இவற்றை எல்லாம்விட மேலான மக்கள் பலம் எம்மிடம் உள்ளது-என்றார். (அ)

# யாழில் மதுபோதையில் பஸ்ஸை செலுத்திய இ.போ.ச சாரதியின் அனுமதிப்பத்திரம் ரத்து!

யாழ்ப்பாணம், ஒக். 25

மதுபோதையில் பேருந்து செலுத்திய இ.போ.ச சாரதியின் சாரதி அனுமதிப்பத்திரம் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தினால் இரத்து செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2ஆம் திகதி ஊர்காவற்றுறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த இ.போ.ச பஸ்ஸை வழிமறித்து சோதனையிட்டபோது, சாரதி மது போதையிலிருந்தமை தெரியவந்தது.

அவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு, நேற்று முன்தினம் அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.

சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து, அவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன், அவரது சாரதி அனுமதிப்பத்திரம் ஒரு வருடத்துக்கு இரத்து செய்யப்பட்டது. (அ)

# செந்திலும் சாணக்கியனும் இணைந்து கிழக்கில் சூழ்ச்சி

## அம்பிட்டிய சுமண தேரர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 25

“கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானும், நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனும் இணைந்தே கிழக்கில் சூழ்ச்சி திட்டங்களை முன்னெடுக்கின்றனர்.” - என்று அம்பிட்டிய சுமன ரத்ன தேரர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் கூட்டமைப்பினருக்கு சார்பாக செயற்படுகின்றார் எனவும் தேரர் குறிப்பிட்டார்.

அதேவேளை, கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் சிங்கள மக்களை அச்சுறுத்தும் வகையில் சாணக்கியன் அறிவிப்புகளை விடுத்து வருகின்றார் எனவும் தேரர் குற்றஞ்சாட்டினார்.

அத்துடன், மனித உரிமை ஆணைக்குழுவிலும் தேரர் முறைப்பாடு செய்துள்ளார். (அ)

# கடன் மோசடியில் ஈடுபட்ட ஓய்வுபெற்ற அதிபர் கைது!

கொழும்பு, ஒக். 25

ஒய்வு பெற்ற பெண் அதிபர் ஒருவர் அரச வங்கியின் நான்கு கிளைகளில் இருந்து 26 சந்தர்ப்பங்களில் 42 மில்லியன் ரூபாய்க்கு மேல் மோசடி செய்த குற்றச்சாட்டில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் (சிஐடி) பொது முறைப்பாடு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹிந்தகல பிரதேசத்தில் வசிக்கும் 69 வயதுடைய ஓய்வுபெற்ற அதிபரே கைதாகினார்.

இந்த கடன் திட்டம் ஆசிரியர்களுக்கு மட்டுமே கடன் வழங்குகிறது. விண்ணப்பதாரர் பணி புரியும் பாடசாலையின் அதிபரால் தொடர்புடைய ஆவணங்களின் சான்றளிக்கப்படவேண்டும்.

இந்த ஓய்வுபெற்ற அதிபர் தற்போது அதிபராக கடமையாற்றுவதாக போலி முத்திரைகள் மற்றும் ஆவணங்களைத் தயாரித்துள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆசிரியர்களுக்கான பிரத்தியேகமான மேற்கண்ட சலுகைக் கடன் திட்டத்தின் கீழ் ஆசிரியர் அல்லாதவர்களுக்கு கடன் வசதிகளை ஏற்பாடு செய்ய இவர் போலி ஆவணங்களைப் பயன்படுத்தினார்.

ஒய்வு பெற்ற அதிபர் தயாரித்த போலி ஆவணங்களை சமர்ப்பித்து ஆசிரியர் அல்லாத 26 பேர் இவ்வாறு கடன் பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கடன் பெற்றவர்களிடம் ஒய்வு பெற்ற அதிபர் தரகுப் பணம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

மேலும் கடன் வாங்கிய 26 பேரும் முறையாக தவணை செலுத்தி வருவதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த மோசடியை சம்பந்தப்பட்ட வங்கியின் அதிகாரி கண்டுபிடித்தார். இது தொடர்பாக வங்கி சி.ஐ.டியிடம் முறைப்பாடு செய்துள்ளது. (அ)

# ரூ.4,000 மில்லியன் போதைப்பொருள் கடத்தலின் பின்னணியில் தமிழன்!

கொழும்பு, ஒக். 25

கடந்த ஞாயிற்றுக்கிழமை கடற்படை மற்றும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட கூட்டு நடவடிக்கையில், தெற்கு கடற்கரைக்கு அப்பால் உள்ள ஆழ்கடல் பகுதியில் கைப்பற்றப்பட்ட ரூ.4,000 மில்லியன் பெறுமதியான 212 கிலோ ஹெரோயின் மற்றும் கிரிஸ்டல் மெத்தாம்பெட்டமைன் (ஐஸ்) ஆகியவற்றை கடத்த முயன்ற தன் பின்னணியில், தற்போது பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு போதைப்பொருள் கடத்தல்காரர்களே இருந்தனர் எனக் கூறப்படுகிறது.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ள ‘தேவுந்தர தமிழ்’ மற்றும் ‘பாபோல் களு’ ஆகிய இரு பாதாள உலகக் குற்றவாளிகள் இந்த கடத்தல் முயற்சியின் பின்னணியில் இருப்பதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த கடத்தல் முயற்சி தொடர்பில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவிற்கு முன்கூட்டியே கிடைத்த தகவலையடுத்து சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள போதைப்பொருள் கடத்தல்காரர்கள் இருவரும் கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்தி போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட நீண்ட விசாரணையின் போது தகவல் வெளியாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்தின் தகவலின் படி, தேவுந்தர தமிழ், நாட்டில் போதைப்பொருள் கடத்தலில் முன்னணியில் உள்ளார்.

விசாரணையில், 1,000 கிலோ ஹெரோயின் மற்றும் ஐஸ் நிரப்பப்பட்ட கப்பலை பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு அருகில் உள்ள சர்வதேச கடல் எல்லைக்கு கொண்டு வந்த பாகிஸ்தான் கடத்தல்காரர்கள், இலங்கை கடத்தல்காரர்களிடம் ஒப்படைத்தது தெரியவந்தது.

ஏனைய கடத்தல்காரர்களின் உத்தரவுக்கமைய எஞ்சிய போதைப் பொருட்கள் வேறு படகுகளில் ஏற்றப்பட்டதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் தெரியவந்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை கைப்பற்றப்பட்ட கப்பலை சோதனை செய்ததில், சுமார் 180 கிலோ 800 கிராம் எடையுள்ள 160 ஹெரோயின் பொதிகள் மற்றும் 31 கிலோ 550 கிராம் எடையுள்ள 28 கிரிஸ்டல் மெத்தாம்பெட்டமைன் (ஐஸ்) பொதிகள் இருந்தன. (அ)

# பயிர்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு

கொழும்பு, ஒக். 25

சீரற்ற காலநிலையால் போதியளவு நீரைப் பெற்றுக்கொடுக்க முடியாத காரணத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதேவேளை சீரற்ற காலநிலையால் சுமார் 58,770 ஏக்கர் நெல் மற்றும் ஏனைய பயிர்கள் சேதமடைந்துள்ளன. சுமார் 53,965 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கு விவசாய அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட யோசனையை அமைச்சரவை கவனத்தில் எடுத்தது.

அரசாங்கம் கடினமான நிதி நிலைமையை எதிர்கொண்டுள்ளபோதிலும், தற்போதைய பயிர்க் காப்புறுதித் திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்குத் தேவையான நிதியை ஒதுக்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (அ)

# பெரமுனவை எதிர்த்தால் ஆட்சியை கவிழ்ப்போம்!

## எஸ். பி. திஸாநாயக்க எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 25

பொதுஜன பெரமுனவுக்கு எதிராக செயற்பட்டால் அரசாங்கத்தை கவிழ்க்க முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் அனைத்து அமைச்சர்களும் நீக்கப்பட்டாலும் நீங்கள் காத்திருப்பதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாது என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர், இல்லை, இல்லை ஆட்சியைக் கவிழ்க்க முடியும். எம்மால் செய்யக்கூடிய பல விடயங்கள் உள்ளன. வரவு - செலவுத் திட்டத்தைத் தோற்கடிப்பதுடன் பல விடயங்களைச் செய்ய முடியும் என்று தெரிவித்தார். (அ)

# கல்முனை கார்மேல் பற்றிமாவில் சிறப்பான வாணி விழா நிகழ்வு





அம்பாறை, ஒக். 25

**கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் வருடாந்த வாணி விழா நேற்று முன் தினம் திங்கட்கிழமை கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ச.இ. றெஜினோல்ட் எவ்.எஸ்.ஸி. தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.**

ஆன்மீக அதிதியாக மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் ஆச்சிரம பொது முகாமையாளர் சிறீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் கலந்து ஆசி வழங்கினார்.

கல்முனை ஆதாரவைத்திசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா. முரளீஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ், பிரதம குரு சிவஸ்ரீ கோபால நிரோஷன், உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, கோட்டக் கல்விப்பணிப்பாளர் ச.சரவணமுத்து, தொழிலதிபர் பிரகலதன் பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் பொறியியலாளர் ரி.கதீசன் ஆகியோர் உள்ளிட்ட அதிதிகள் கலந்து கொண்டார்கள். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் மேடையேறின.

(அ)



கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் வாணி விழா சிறப்பு நிகழ்வுகள் நேற்று முன் தினம் மாகாண சுதேச மருத்துவ திணைனக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.சிறீதர்தலைமையில்இடம்பெற்றது. இவ்விழாவில்திணைக்களத்தின் திட்டமிடல் பிரிவு வைத்தியர்கள், உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# தோட்டத்துக்குள் நுழைந்த மாடுகளை வெட்டிக் காயப்படுத்தியவர்கள் கைது

திருமலை, ஒக். 25

சேருநுவர நீலபொல பிரதேசத்திலுள்ள தோட்டமொன்றிற்குள் புகுந்த 20 மாடுகள் வெட்டிக் காயப்படுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பில் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவற்றுள் 7 மாடுகளின் நிலமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளதாகவும் இவற்றில் சில கன்று ஈனும் பருவத்தில் உள்ள பசுக்கள் எனவும், இதனால் தனக்கு சுமார் 8 இலட்சம் ரூபாய்களுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் மாட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட இருவரையும் தடுப்பு காவலில் வைக்குமாறு மூதூர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

(அ)

# உயிருக்கு போராடும் யானை



மட்டக்களப்பு, ஒக். 25

அக்கரைப்பற்று இசங்காணிச்சீமை வயல் பிரதேசத்தில் கடந்த இரு தினங்களாக காட்டு யானையொன்று கால்வாய்க்குள் வீழ்ந்து உயிருக்குப் போராடி வருவதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை அதிகாலை வேளையில் இக்காட்டு யானை கால்வாய்க்குள் வீழ்ந்தாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

காலில் காயம் ஏற்பட்டு நடக்க முடியாத நிலையில் சில தினங்களாக இப்பிரதேசத்தில் இக்காட்டு யானைகள் நடமாடி வந்ததாக பிரதேச மக்கள் மேலும் கூறினர்.

சம்பவ இடத்துக்கு சென்ற அக்கரைப்பற்று பொலிஸார் அம்பாறை வன ஜீவாராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவித்ததையடுத்து ஸ்தலத்துக்கு விரைந்த வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் யானைக்கு சிகிச்சையளித்தனர்.

அத்தோடு இயந்திரத்தின் உதவியுடன் கால்வாய்க்குள் அகப்பட்ட யானையை மீட்பதற்காக பல மணி நேரம் முயற்சித்தும் யானையை கால்வாயினை விட்டு அப்புறப்படுத்த முடியவில்லை.

தற்போது இக்கால்வாயில் அதிகளவிலான நீர் ஓடிக் கொண்டிருப்பதாகவும் இதன்மூலம் யானை சுவாசிக்க முடியாமல் சிரமப்பட்டு வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் இணையத்தளம் ஆரம்பம்



அம்பாறை, ஒக். 25

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் உத்தியோகபூர்வ இணையத்தளம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் சுகாதார தகவல் முகாமைத்துவப் பிரிவு குறித்த இணையத்தளத்தினை வடிவமைத்து அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வை ஒருங்கிணைப்பு செய்திருந்தது.

சுகாதார தகவல் முகாமைத்துவப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஐ.எம்.முஜீப்பினால் இணைப்புச் செய்யப்பட்ட இந்நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் இணையத்தளத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில் பிரிவுத் தலைவர்கள், கணக்காளர், நிருவாக உத்தியோகத்தர் உள்ளிட்ட பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

(அ)

# மாணவர் நலன் கருதி பள்ளிக்குடியிருப்பில் இலவச கணினி நிலையம் திறந்துவைப்பு



திருமலை, ஒக். 25

மாணவர்களின் நலன் கருதி மூதூர் பிரதேச செயலாளர் பிரிவு உட்பட்ட பள்ளிகுடியிருப்பு சின்னக்குளம் முதலான பின் தங்கிய கிராமத்தில் வாழும் மாணவர்களின் கணினி அறிவை வளப்படுத்தும் முகமாக கணினி கல்வி நிலையம் எம் கடமை நிறுவனத்தினால் திறந்து வைக்கப்பட்டது.

என் கடமை அமைப்பின் பணிப்பாளர் இ. ஜிவேந்திரன் மூதூர் பொலிஸ் நிலைய அத்தியட்சகர் நிசங்க கொடமுனே, சம்பூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துசார, சம்பூர் இந்துக்கல்லூரி அதிபர், ஆலயக் குருக்கள், சட்டத்தரணிகள் உட்பட பலர் கொண்டனர். (அ)

# இந்து கலாசார திணைக்களத்தின் நவராத்திரி விழா காரைதீவில்!



அம்பாறை, ஒக். 25

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தேசிய நவராத்திரி விழா காரைதீவில் நடைபெற்று வருகிறது.

இந்து சமய கலாச்சார திணைக்களமும் காரைதீவு பிரதேச செயலகமும் காரைதீவு விபுலானந்த பணி மன்றமும் இணைந்து மூன்றாவது வருடமாக தொடர்ச்சியாக நடத்துகின்ற நவராத்திரி விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை எட்டாவது நாளாக மணிமண்டபத்தில் நடைபெற்றது.

அங்கு பிரதம அதிதியாக திருக்கோவில் பிரதேச உதவி பிரதேச செயலாளர் க.சதிசேகரன் கலந்து சிறப்பித்தார்.

விபுலானந்தா மணி மண்டபஆலோசகரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா கலந்துகொண்டு சிறப்பு சொற்பொழிவாற்றினார் .

மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜ் ஏற்பாட்டில் நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

கதாபிரசங்கி நாகராஜா சனாதனன் பணி மன்றப் பொருளாளர் வி.குலேந்திரன் மற்றும் அறநெறி மாணவர்கள் ஆசிரியர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தார்கள்.

மஞ்சுலேகா நர்த்தனாலயம் மற்றும் விஸ்ணு அறநெறி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் மேடையேறின. மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் வெளியிட்ட சரஸ்வதி படம் பொறித்த திருவுருவ படமும் பிரதம அதிதிக்கும் ஆசிரியைக்கும் வழங்கப்பட்டது. கடந்த ஒன்பது தினங்களிலும் இவ்வாறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இன்று கலைவகுப்புகளின் வித்தியாரம்ப நிகழ்வுகள் இடம் பெறும். (அ)

# புடினுக்கு மாரடைப்பு!



## படுக்கையறை தரையில் விழுந்து கிடந்ததாக தகவல்

**மொஸ்கோ, ஒக். 25**

**ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு ஞாயிற்றுக்கிழமை மாலை மாரடைப்பு ஏற்பட்டுள்ளதாக ரெலிகிராம் சனலான 'ஜெனரல் எஸ்.வி.ஆர்'ஐ மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.**

இதன்படி, தனது படுக்கையறை தரையில், உணவு மற்றும் பானங்களுடன் கவிழ்ந்த மேசையுடன் புடின் படுத்திருப்பதைக் அதிகாரிகள் கண்டுள்ளனர்.

"அநேகமாக, புடின் விழுந்த போது, மேசை மற்றும் பாத்திரங்களை அடித்து தரையில் தள்ளியுள்ளார். இது சத்தத்தை ஏற்படுத்தியது.

புடின் கண்களை உருட்டிக் கொண்டு தரையில் படுத்துக் கொண்டிருந்தார்.

பணியில் இருந்த மற்றும் அருகிலுள்ள அறைகளில் இருந்த வைத்தியர்கள் உடனடியாக அழைக்கப்பட்டனர்" என்று ஜெனரல் எஸ்.வி.ஆர் இல் குறிப்பிடப்பட்டுள்ளதாக மிரர் செய்தி வெளியிட்டுள்ளது.

புடின் உடனடியாக அவரது இல்லத்தில் உள்ள பிரத்தியேக அறைக்கு மாற்றப்பட்டதாகவும், அவரது உத்தியோகபூர்வ இல்லத்திற்குள் அமைந்துள்ள சிறப்பு தீவிர சிகிச்சை நிலையத்திற்கு அழைத்துச் செல்வதற்கு முன்பு புடினுக்கு வைத்தியர்கள் புத்துயிர் அளித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"உதவி சரியான நேரத்தில் வழங்கப்பட்டது, இதனால் புடின் சுயநினைவு பெற்றார்," என்று அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், புடினின் உடல்நிலை மோசமடைந்தது பற்றிய கூற்றுக்களை கிரெம்ளினால் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த சம்பவத்திற்கு பிறகு புடினுக்கு நெருக்கமான பலர் தொலைபேசியில் தொடர்பு கொண்டதாகவும், உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் சாத்தியமான நடவடிக்கைகள் குறித்து திங்களன்று ஆலோசனை நடத்த புடின் ஒப்புக்கொண்டதாகவும்" மிரர் வெளியிட்டுள்ள செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு தொடங்கியதில் இருந்து, புடினின் உடல்நிலை மோசமடைந்ததாக பல தகவல்கள் வெளியாகியிருந்தன.

புடினுக்கு புற்றுநோயாக இருக்கலாம் அல்லது பார்கின்சன் நோயாக இருக்கலாம் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், புடின் "நல்ல ஆரோக்கியத்துடன்" இருக்கிறார் என்று கிரெம்ளின் பலமுறை மறுப்பு வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



# பிரான்ஸ் ஜனாதிபதி இஸ்ரேலுக்கு விஜயம்

டெல் அவிவ், ஒக். 25

இஸ்ரேல் -ஹமாஸ் இடையேயான போர் ஆரம்பமாகி நேற்றோடு 18ஆவது நாள் தாக்குதலுக்குப் பிறகு இருதரப்பிலும் பலி எண்ணிக்கை 6,500ஐ கடந்துள்ளது.

இந்நிலையில், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவல் மக்ரான் நேற்று இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் நகரை சென்றடைந்தார்.

அவரை தூதரக அதிகாரிகள் வரவேற்றிருந்தனர். இஸ்ரேல் பிரதமரை சந்திப்பதுடன், பலஸ்தீன தலைவர்களையும் அவர் சந்திக்க உள்ளார்.

ஏற்கனவே அமெரிக்க அதிபர் ஜோ பைடன், பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக் ஆகியோர் இஸ்ரேல் சென்று அந்நாட்டின் தலைவர்களை சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஹமாஸ் பிடியில் இருந்த மேலும் 2 பேர் விடுவிப்பு!



ஜெருசலேம், ஒக். 25

ஹமாஸ் அமைப்பின் பிடியில் இருந்த மேலும் இரண்டு பணய கைதிகள் நேற்று விடுவிக்கப்பட்ட நிலையில் அவர்கள் இராணுவ ஹெலிகொப்டர் உதவியுடன் இஸ்ரேலுக்கு கொண்டுவரப்பட்டனர்.

காசாவில் ஹமாஸின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்ட அவர்களுக்கு இஸ்ரேல் வைத்தியசாலையில் உடல்நல பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர்கள் நலமுடன் இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வாரம் பணயக் கைதிகளாக இருந்த நிலையில் விடுவிக்கப்பட்ட அவர்களுக்கு போதிய சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு, பணய கைதிகளாக சிறைபிடித்துள்ள சென்ற இரு அமெரிக்க பிரஜைகளை ஹமாஸ் அமைப்பு விடுவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பிரிட்டன், ஐரோப்பாவில் யூதருக்கு எதிராக வெறுப்புணர்வு அதிகரிப்பு

லண்டன், ஒக். 25

பிரிட்டனில் யூதர்களுக்கு எதிராக வெறுப்புணர்வுக் குற்றங்கள் கணிசமாக அதிகரித்துள்ளதாக லண்டன் மாநகரக் காவல்துறை தலைமையகம் தெரிவித்துள்ளது.

ஒக்டோபர் முதலாம் திகதி முதல் 18ஆம் திகதிவரை லண்டனின் பல பகுதிகளில் யூதர்களுக்கு எதிராக 218 வெறுப்புணர்வுக் குற்றங்கள் பதிவான தாக பி.பி.சி செய்தி நிறுவனம் தெரிவித்தது.

கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில் இந்த எண்ணிக்கை வெறும் 15ஆக இருந்தது.

அதேவேளை, முஸ்லிம்களுக்கு எதிராக 101 வெறுப்புணர்வுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. கடந்த ஆண்டு இந்த எண்ணிக்கை 42ஆக இருந்தது.

இதன் தொடர்பில் இதுவரை 21 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பி.பி.சி. தெரிவித்தது.



இந்நிலையில், ஐரோப்பாவிலேயே ஆகப்பெரிய யூதர் சமூகத்தைக் கொண்டுள்ள பிரான்சில், யூதர்களுக்கு எதிராக 320 இற்கும் அதிகமான குற்றச்செயல்கள் பதிவாகியுள்ளன.

இஸ்ரேல்-ஹமாஸ் போர் தொடங்கிய முதல் 10 நாட்களில் பிரான்சில் 180க்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டதாக தி கார்டியன் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

ஐரோப்பாவின் பல பகுதிகளிலும் யூதர் வழிபாட்டுத் தலங்கள், பள்ளிகள், சமூக நிலையங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளன.

தாங்கள் விழிப்புடன் இருப்பதாக பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலியில் உள்ள யூதர் சமூகங்கள் கூறியுள்ளன. (அ)

# இரண்டு ரயில்கள் மோதி பங்களாதேஷில் விபத்து!

## இதுவரை 17 பேர் பலி

பங்களாதேஷில் இரண்டு ரயில்கள் மோதிக் கொண்ட விபத்தில் 17பேர் உயிரிழந்தனர்.

விபத்தில் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளது டன், உயிரிழப்புகள் அதிகரிக்கும் வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பங்களாதேஷில் டாக்கா மாகாணத்தின் கிஷோர்கஞ்ச் மாவட்டத்தில் இருந்து டாக்கா நோக்கிச் சென்று கொண்டிருந்த இகரொசிந்தூர் எக்ஸ்பிரஸ் ரயில், புறப்பட்ட சில நிமிடங்களில் மாற்று தண்டவாளப் பாதைக்காக மாற்றப்பட்டு இருந்தது.

எக்ஸ்பிரஸ் ரயில் மெல்ல தண்டவாளம் மாறிக் கொண்டிருந்த போது, திடீரென வேகமாக வந்த சரக்கு ரயில் எக்ஸ்பிரஸ் ரயில் மீது மோதியது.

இந்த விபத்தில் எக்ஸ்பிரஸ் ரயிலின் பெட்டிகள் தடம்புரண்டன. இதன் காரணமாக எக்ஸ்பிரஸ் ரயிலில் பயணம் செய்தவர்களில் இதுவரை 17 பேர் உயிரிழந்தனர். மேலும் நூற்றுக்கணக்கானோர் காயமுற்றனர். விபத்து குறித்த தகவல் அறிந்ததும், மீட்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர்.

ரயில் விபத்துக்குள்ளான பகுதியில் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதுடன், இந்த விபத்தில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்குமென அஞ்சப்படுகிறது. விபத்து தொடர்பான விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ)



# நாணய நிதியத்தின் பணிப்பாளரை சந்தித்து பேசினார் பிரதமர் தினேஷ்

**கொழும்பு, ஒக். 25**

**பிரதமர் தினேஷ் குணவர்தன, சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியனை கொழும்பில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.**

கடன் மறுசீரமைப்பு முறையின் முன்னேற்றம், அரசாங்கத்தின் இடைக்கால மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கான நீண்ட கால திட்டங்களுக்கு தேவையான உதவிகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மேலும் இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான நிவாரண திட்டங்கள் குறித்தும் கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியனுக்கு பிரதமர் எடுத்துரைத்தார்.

பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க மற்றும் மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளர் பி.கே.ஜி ஹர்ச்சந்திர ஆகியோரும் இந்த கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து இரண்டாவது கடன் தவணை எப்போது கிடைக்கும் என தன்னால் உறுதியாகக் கூற முடியாது என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். (அ)

# இலங்கையின் பொருளாதார உச்சி மாநாடு அடுத்த மாதம்

கொழும்பு, ஒக். 25

இரண்டாவது 'இலங்கை பொருளாதார உச்சி மாநாடு -2023' அடுத்த மாதம் 28 ஆம், 29ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டின்போது குறிப்பாக பொருளாதார சீர்திருத்தங்களுக்கான அவசியம் மற்றும் பொருளாதார அபிவிருத்தியில் தற்போது ஏற்பட்டுள்ள சாத்தியமான தாக்கம் என்பன குறித்து கவனம் செலுத்தப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தவிர, மறுசீரமைப்பு மூலம் ஏற்படும் மாற்றம், மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை அபிவிருத்தி செய்வதில் தொழிலாளர்களின் பங்கு என்பன அமர்வின் மையமாக இருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அமர்வில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் உட்பட தொழில் அமைச்சு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு போன்றவற்றின் நிபுணர்கள் மற்றும் ஆலோசகர்கள் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 400 காட்டு யானைகள் இவ்வருடம் உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 25

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 400 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

யானை - மனித மோதலினால் சுமார் 200 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்தன சூரியபண்டார குறிப்பிட்டார்.

பல காட்டு யானைகள் துப்பாக்கிச் சூடு மற்றும் வீதி விபத்துகளில் உயிரிழந்துள்ளதுடன் வெவ்வேறு நோய்களாலும் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் 6000 யானைகளே இருப்பதாக வனஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

மனித நடவடிக்கைகளின் காரணமாக வசிப்பிடங்களை இழந்துள்ள காட்டு யானைகள் கிராமங்களுக்குள் ஊடுருவும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)

# வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கு மின்சார வாகன இறக்குமதி உரிமம் வழங்கல்

கொழும்பு, ஒக். 25

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கு மின்சார வாகன இறக்குமதி உரிமம் வழங்கும் வேலைத்திட்டம் முழு வெளிப்படைத்தன்மையுடன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 318 மின்சார வாகன இறக்குமதி உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதற்காக 38 மில்லியன் அமெரிக்க டொலர்களை நாடு பெற்றுள்ளதாகவும் அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இதில், மோசடிகள் இடம்பெற்றிருந்தால் விசாரணை நடத்துவதற்கு பூரண ஆதரவு வழங்கப்படும் எனவும் குறுகிய அரசியல் நோக்கங்களினால் இந்த நடவடிக்கையை மீளப்பெற முடியாது எனவும் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு கட்டணச் சலுகையுடன் வழங்கப்பட்ட 119 உரிமங்களை முறைகேடாகப் பயன்படுத்தி வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக பாராளுமன்றத்தின் வழிகள் மற்றும் வழிமுறைகள் குழுவில் அண்மையில் தெரியவந்துள்ளது.

குறித்த வாகனங்களில் 75 வீதம் ஒரு நிறுவனத்தினால் இந்த நாட்டுக்கு கொண்டு வரப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் ஆராய்ந்து வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டார். (அ)

# சிரேஷ்ட பிரஜைகளுக்கான வருமான வரி முற்பணத்தை மீள வழங்குவதற்கு திட்டம்

கொழும்பு, ஒக். 25

60 அல்லது 60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளிடமிருந்து வங்கி அல்லது நிதி நிறுவனங்களால் வட்டி வருமானத்திலிருந்து அறவிடப்பட்ட 05 வீத வருமான வரி முற்பணத்தை மீள செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பிரஜைகளின் நிதி நிலைமைக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கிணங்க, வருடாந்த வருமானம் 12 இலட்சத்துக்கு மேற்படாத வரி வருமானம் மீதான முற்பண வரி அறவிடப்பட்டுள்ள அனைத்து சிரேஷ்ட பிரஜைகளும் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

சிரேஷ்ட பிரஜைகள் ஒரு காலாண்டுக்கு அதிகபட்சமாக 25,000 ரூபா வரை மீளப் பெறலாம் என்பதுடன், அந்த மீளப் பெறுகையானது, 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி ஆரம்பமாகி அடுத்த ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி முடிவடையும் காலப்பகுதியை கொண்டிருத்தல் வேண்டும்.

தகுதி வாய்ந்தவர்களுக்கு ஆண்டு முழுவதும் இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெற முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மீளப்பெறும் தொகை, சிரேஷ்ட பிரஜைகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக வைப்பிலிடப்படும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு விண்ணப்பிக்க விரும்பும் சிரேஷ்ட பிரஜைகள், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்தோ அல்லது அருகிலுள்ள நகர அலுவலகத்திற்குச் சென்றோ விண்ணப்பிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பத்தை சமர்ப்பித்த பின்னர், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, தகுதி வாய்ந்தவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் எனவும் இது தொடர்பான அனைத்து தகவல்களையும் 1944 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும் எனவும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# மருந்தகத்தை உடைத்து ரூ. 350,000 பணத்தை திருடிச் சென்ற நபர் கைது!

கொழும்பு, ஒக். 25

கட்டுகஸ்தோட்டை நகரில் உள்ள மருந்தகம் ஒன்றுக்குள் இரவு வேளையில் நுழைந்து 3, 50,000 பணம் வைக்கப்பட்டிருந்த இரும்புப் பெட்டகத்தையும் திருடிச் சென்ற நபரை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் நேற்று திங்கட்கிழமை கைது செய்துள்ளனர்.

கட்டுகஸ்தோட்டை நகரில் உள்ள மருந்தகம் உடைக்கப்பட்டு பெட்டகம் திருடப்பட்டுள்ளதாகவும், அதில் 350,000 ரூபா பணம் இருந்ததாகவும் மருந்தக உரிமையாளர் கட்டுகஸ்தோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணை நடத்தி, சந்தேக நபரை கைது செய்தனர். பெட்டியில் இருந்த 350,000 ரூபா பணத்தை எடுத்து சூதாடியதாக சந்தேக நபர் பொலிஸில் வாக்கு மூலம் வழங்கியுள்ளார். (அ)

# 7 நாடுகளுக்கு இனிமேல் வீஸா கட்டணம் இல்லை

கொழும்பு, ஒக். 25

ஏழு நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளிடமிருந்து விஸா கட்டணத்தை அறவிடாமலிருக்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

சீனா, ரஷ்யா, இந்தியா, தாய்லாந்து, இந்தோனேஷியா, மலேஷியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் சுற்றுலாப் பயணிகளுக்காக இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கும் நோக்கில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்தார். (அ)

# சிறுவர் கதைப் புத்தக அட்டைகளுக்குள் ரூ.23 கோடி பெறுமதியான கொக்கெய்ன்

கொழும்பு, ஒக். 25

08 சிறுவர் கதைப் புத்தகங்களின் அட்டையில் இருபத்து மூன்று கோடி ரூபா பெறுமதியான கொக்கெய்ன் போதைப் பொருளை இலங்கைக்குக் கொண்டு வந்த இந்தோனேசியப் பெண்ணொருவர் நேற்று முன்தினம் சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் அந்நாட்டில் புடைவை வர்த்தகத்தில் ஈடுபட்டு வரும் 42 வயதுடைய பெண் என முதற்கட்ட சுங்க விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

அவர் முதலில் எத்தியோப்பியாவின் அடிஸ் அபாபாவிலிருந்து இந்த போதைப்பொருள் சரக்குகளுடன் தனது பயணத்தை தொடங்கி கட்டாரின் டோஹாவுக்கு வந்து அங்கிருந்து கட்டார் ஏயார்வேஸ் விமானம் மூலம் நாட்டுக்கு வந்தார்.

04 கிலோ 598 கிராம் எடையுடைய தடிமனான ஆங்கில சிறுவர் கதைப் புத்தகங்களின் அட்டைகளை கவனமாக வெட்டித் தயார் செய்து தனது பொதிகளில் மறைத்து வைத்திருந்துள்ளார்.

இந்த வருடத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் மேற்கொண்ட ஐந்தாவது கொக்கெய்ன் போதைப்பொருள் சோதனை இதுவென சிரேஷ்ட சுங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

# யாழ்ப்பாணம், வவுனியாவை சேர்ந்த இருவர் கறுப்பு பட்டியலிலிருந்து நீக்கம்

கொழும்பு, ஒக். 25

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உதவியதற்காக கறுப்புப் பட்டியலில் கைது செய்யப்பட்ட இருவரை அதிலிருந்து நீக்க பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்னவினால் இது குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

வவுனியாவைச் சேர்ந்த அந்தோனி எமில் லக்ஷ்மி காந்தன் மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முருகேசு சிறீ சண்முக ராஜா ஆகிய இருவரும் தடைப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத நடவடிக்கைகளை ஆதரித்தமைக்காக இருவரும் கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் தடுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## போதை..

91 கடல் மைல் தொலைவில் கடல் பரப்பில் கைப்பற்றப்பட்ட 400 கோடி ரூபாய் பெறுமதியான 200 கிலோ ஹெரோயின் போதைப்பொருளை கொழும்பு துறைமுகத்தில் நேற்று பார்வையிட்டார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், போதைப்பொருள் கட்டளை நிறுவனத்தை ஸ்தாபிப் பதற்கான சட்டமூலம் தயாரிக்கப் பட்டுள்ளது. எதிர்வரும் நாட்களில் இது பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும். நாட்டுக்குள் கொண்டுவரப்படும் போதைப்பொருட்களில் 65 சதவீதத்தை மட்டுமே தடுக்க முடிகிறது. ஏனைய 35 சதவீத போதைப்பொருட்கள் நாடுக் குள் கொண்டு வரப்படுகின்றன. இதனை முற்றாக தடுப்பதற்கான கடல்சார் வேலைத்திட்டம் அவசியம் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## பௌத்த...

தெரிவித்தார்.

அத்துடன், நீண்ட நாட்களாக திருகோணமலை மாவட்டத்தை ஒரு பௌத்த மாவட்டமாக மாற்றுகின்ற நீண்ட கால திட்டம் இப்போது துரிதகதியில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

விசேடமாக குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் 30 க்கும் மேற்பட்ட புத்தர் சிலைகளும வணக்கஸ்தலங்களும் உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் 23 இடங்களில் வேலைகள் இடம்பெற்று வருகின்றது. பௌத்த மக்கள் வாழாத இடத்தில் கூட புத்தர் சிலைகளை நிர்ணயிக்கும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, கிழக்கு ஆளுநர் தடை விதித்தாலும்கூட படைப் பிரிவின் அனுசரணையுடன பௌத்த விகாரைகள் கட்டும் பணிகள் தொடர்கின்றன என்றும் அவர் கூறினார். (ஐ)

## முறிகண்டி...

திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது. தற்போது இந்த ஆலயம் இந்துப் பண்பாட்டு நிதியத்தின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றது.

கோவில் வருமானத்தில் ஒரு பகுதி வன்னிப்பிராந்தியத்தில் இந்து சமய வளர்ச்சிக்காக இந்துப் பண்பாட்டு நிதியத்தின் மூலம் செலவிடப்படுகிறது.

திருமுறிகண்டிப் பிள்ளையார் கோவிலின் பரம்பரை அறங்காவலர் என்று கூறிக்கொள்ளும் ஒருவரால், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நிர்வகித்து வரும் இவ் ஆலயத்தினை தன்னிடம் மீள ஒப்படைக்குமாறு நீதிமன்றத்திற்கு உத்தரவிடக் கோரி 2011 ஆம் ஆண்டு அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்தார்.

நீண்ட காலமாக இடம்பெற்ற இவ்வ ழக்கு இன்றயதினம் மூவர் அடங்கிய உயர்நீதிமன்ற நீதிபதிகளால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. குறித்த ஆலயம் அமைந்துள்ள ஆலய காணி அரச காணி என்பதால் தனி நபர் ஒருவர் ஆலயத் திற்கு உரிமை கொண்டாட முடியாது.

நீண்ட காலமாக இவ் வழக்கு இடம்பெற்று வந்ததால் குறித்த பிரதேசத்தில் அடிப்படை சுகாதார வசதிகள், உட்கட்டுமானப் பணிகள் மற்றும் பிரதேசத்தை அழகுபடுத்தும் பணிகள் மேற்கொள்வதற்கு தடை ஏற்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க உமாமகேஸ்வரன், ஆலய உரிமை தொடர்பான வழக்கு உயர் நீதிமன் றத்தால் தள்ளுபடி செய்யப்பட் டுள்ளதால் இப்பகுதியை துரிதமாக அபிவிருத்தி செய்யும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படும் - என்றார். (ஐ)

## கொன்று...

தனது தாயாருடன் தொலைபேசியில் பேசி வந்துள்ளார். இந்நிலையில், சில நாட்களாக அவர் தொலைபேசியில் தொடர்பு கொள்ளாத நிலையில் பெண்ணின் தாயார் அவர்கள் தங்கி யிருந்த வீட்டுக்கு சென்றுள்ளார். அங்கு எவரும் இல்லாத நிலையில் சந்தேகம டைந்த தாயார் பொலிஸ். நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில் வீட்டின் மலசலகூட குழியருகே குழி வெட்டப்பட்டு புதைக் கப்பட்ட நிலையில் பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது.

இதையடுத்து சந்தேகத்தின் அடிப்ப டையில் பெண்ணின் கணவர் கைது செய்யப்பட்டார். இவர், முள்ளியவளை குமாரபுரத்தை சேர்ந்தவர்.

சம்பவ இடத்துக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி த. பிரதீபன் நேரில் சென்று விசாரணைகளை கண்கா ணித்தார்.

பொலிஸார் மேலதிக விசாரணை களை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

## பொங்கலில்...

அந்தச் சமயம் வேகமாக வந்த டிப்பர் பெண்ணுக்கு சற்றுத் தள்ளி நின்றிருந்த வாகனத்தை மோதித் தள்ளியது. இதில் அந்த வாகனம் பெண்ணை மோதியதில் அதன் கீழ் சிக்குண்டு பெண் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன் னெடுத்துள்ளனர். (ஐ)

## மலேசிய...

அவரின் கணவருக்கு 35 வயது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் இருவரும் மலேசியாவில் மென்பொருள் பொறியியலாளராக பணியாற்றி வருவதாக கூறப்படுகின்றது.

இந்நிலையில் விபத்தில் உயிரிழந்த தம்பதியினரின் சடலங்கள் இலங்கைக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (ஐ)

## வரிசை...

தலைமையகமான சிறிகொத்தாவில நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

வங்குரோத்து அடைந் திருக்கும் நாட்டை அதில் இருந்து மீட்பதற்கு ஜனா திபதி தலைமையிலான அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது அரசியல் அனுபவம் மற்றும் சர்வதேச நாடுகளுடன் இருக்கும் தொடர்புகள் மூலம் பொருளாதார நெருக்கடியை போக்கிக்கொள்ள உதவிகளை பெற்று வருகிறார்.

வங்குரோத்து அடைந்திருக்கும் நாட்டை கட்டியெழுப்பவே ரணில் விக்கிரமசிங்க நாட்டை பொறுப்பேற்றார். அதனால் மக்கள் பொருளாதார நெருக்கடி நிலையில் இருக்கும் இந்த சந்தரப்பத்தில் மின் கட்டணம் மற்றும் ஏனைய கட்டண அதிகரிப்புகள் தாங்க முடியாத சுமையாகும் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இருந்தபோதும் குறுகிய காலத்துக்காவது இதனை பொறுத்துக்கொள்ள வேண்டும், இல்லாவிட்டால் மீண்டும் கடந்த வருடத்தில் இடம்பெற்றதைப்போல் எரிபொருள், எரிவாயு பெறுக்கொள்ள வரிசையில் இருக்கவேண்டிய நிலை ஏற்படும் - என்றார். (ஐ)

# அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு தெரிவானோருக்கான அறிவிப்பு!

கொழும்பு, ஒக். 25

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு வேலைத்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெயர்ப் பட்டியலில் உள்வாங்கப்பட்டுள்ள போதும், இதுவரையில் அந்த நன்மைகளை பெற்றுக்கொள்ளாதவர்கள் விரைவில் வங்கிக் கணக்குகளை ஆரம்பித்து தாமதமின்றி அந்த நலன்களை பெற்றுக் கொள்ளுமாறு நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன தெரிவித்தார்.

உரிய வகையில் வங்கிக் கணக்குகளை திறக்காததன் காரணமாக 156,261 பயனாளிகளுக்கு கொடுப்பனவுகளை வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவின் தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் அண்மையில், அஸ்வெசும வேலைத்திட்டம் தொடர்பில் நலன்புரி நன்மைகள் சபை உள்ளிட்ட உரிய தரப்பினருடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முழுமையான வெளிப்படைத் தன்மையுடன் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு சமூக நலன்புரி நிவாரணங்களை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் அஸ்வெசும வேலைத்திட்டத்தின் தற்போதைய நிலைமை தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

அஸ்வெசும பயனாளிகளுக்காக கடந்த ஜூலை மாதத்தில் 05 கட்டங்களின் கீழ் ஒக்டோபர் 16 ஆம் திகதி 1,230,097 குடும்பங்களுக்கு 7,705,302,250.00 தொகையிலான நிதி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. ஜூலை மாதத்திற்கான கொடுப்பனவுகள் டிசம்பர் மாதத்தில் பகிர்ந்தளிக்கப்படும் என நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன தெரிவித்தார்.

மேன்முறையீடு மற்றும எதிர்ப்புகள் தொடர்பிலான விசாரணைகள் நிறைவு செய்யப்படாமல் உள்ளதன் காரணமாக பயனாளிகளுக்கு உரிய கொடுப்பன வுகளை வழங்கும் செயற்பாடுகளில் தாமதம் ஏற்பட்டிருப்பதாக இதன்போது தெரியவந்ததோடு, அது தொடர்பிலான பிரச்சினைகளை நிவர்த்தி செய்து பயனாளிகளுக்கு விரைவில் கொடுப்பன வுகளை பெற்றுக்கொடுக்குமாறு இராஜாங்க அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவித்தார்.

மேலும், 2 இலட்சம் பயனாளிகள் இதுவரையில் வங்கிக் கணக்குகளை ஆரம்பிக்காததன் காரணமாகவே அவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என்றும் வங்கிக் கணக்குகளை ஆரம்பிக்கும் பட்சத்தில் அவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதில் சிக்கல் இல்லை என்றும் ஜயந்த விஜேரத்ன சுட்டிக்காட்டினார்.

மேலும் பிரதேச சபையினால் அஸ்வெசும கணனிக் கட்டமைப்பிலிருந்து வழங்கப்படும் கடிதத்தின் மூலம் தமது பிரதேசங்களிலுள்ள மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கிக் கிளைகளில் அஸ வெசும பயனாளிகள் தங்களுக்கான கணக்குளை ஆரம்பிக்க முடியும் என்றும், அதன் பின்னர் வங்கியினால் அந்த தகவல்கள் நலன்புரி நன்மைகள் சபைக்கு அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

தேசிய அடையாள அட்டை இல்லாததன் காரணமாக வங்கிக் கணக்குகளை திறக்காதிருப்பவர்களுக்கு 06 மாதங்களுக்குள் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிக்க வேண்டும் என்ற நிபந்தையுடன் இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கியில் கணக்குகளை திறப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அஸ்வெசும வேலைத்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பில் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வலுவான பிரிவொன்றை நடத்திச் செல்லவேண்டியதன் அவசியம் மேற்படி சந்திப்பில் வலியுறுத்தப்பட்டதோடு, டிசம்பர் மாதமளவில் கொடுப்பனவு களை முழுமையாக பூர்த்தி செய்ய எதிர்பார்த்துள்ள நிலையில் விசேட வேலை வாரம் ஒன்றை அறிவிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் சந்திமா வீரசிங்க, பிரமரின் மேலதிக செயலாளர் (நிர்வாகம்) கே. பீ.ஹர்ஷ விஜேவர்தன, சிறுவர் மற்றும் மகளிர் வலுவூட்டல் அமைச்சின் மேலதிக செயலாளர் (சமூக வலுவூட்டல்) சம்பிக்க கலுஆரச்சி, தேசிய பாதீட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எம்.அனோமா நந்தினி, தேசிய திட்டமிடல் திணைக்க ளத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் (சமூக உட்கட்டமைப்பு வசதிகள்) ஜே.எம்.எஸ்.டீ.ரத்நாயக்க, ஆட்பதிவு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜீ.பிரதீப் சபுதந்திரி, அரச நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (கிராம அதிகாரி நிர்வாகம்) டீ.டீ.சி அதுகோரல மற்றும் அரச நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (பிரதேச நிர்வாகம்) டபிள்யூ.பீ.சீ.ஏ. வீரசூரிய ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கிகளின் நிறைவேற்று அதிகாரிகள், நலன்புரி நன்மைகள் சபையின் செயற்குழு உறுப்பினர்கள் சிலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# “முட்டை ஏற்றுமதிக்கு சாத்தியம்”

கொழும்பு, ஒக். 25

கோழிமுட்டை மற்றும் கோழி இறைச்சி நாட்டில் அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதமளவில் மிகுதியாக இருக்கு மெனவும் அப்போது இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு முட்டைகளை ஏற்று மதி செய்யக்கூடிய சாத்தியம் உள்ளதாக வும் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் டிசம்பர் மாதம் வரையிலிலேயே இந்நாட்டிற்கு முட்டை இறக்குமதி செய்ய வேண்டிய தேவை இருக்குமென ஊடகங்களுக்கு அவர் தெரிவித்தார்.

ஜனவரி மாதத்திற்குள், இந்நாட்டு நுகர்வுக்குத் தேவையான முட்டைகளை நாட்டிலேயே உற்பத்தி செய்ய முடியும்.

இலங்கைக்கு முட்டை மற்றும் அரிசி இறக்குமதி செய்யப்பட்டாலும், குறைந்த அளவு அரிசி மற்றும் முட்டை மட்டுமே ஏற்றுமதி செய்யப்படுகிறது. சந்தையில் வாடிக்கையாளர்களை பாதுகாக்கும் நோக்கிலேயே இவ்வாறு செய்யப்படுகிறது என அவர் தெரிவித்தார்.

பொதுவாக எமது நாட்டிலிருந்து முட்டை, கோழி இறைச்சி மற்றும் சொசேஜஸ்களை பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது வழக்கம். சர்வதேச சந்தையில் வாடிக்கையாளர்களைத் தக்கவைக்கும் நோக்கிலேயே இவ்வாறு செய்யப்படுகிறது.

ஈழநாடு
Eelanadu

## சுகாதார அமைச்சர் பதவியை பறித்தமை எனக்கு மகிழ்ச்சியே!

**கூறுகிறார் அமைச்சர் கெஹலிய**




கொழும்பு, ஒக். 25

சுகாதார அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டமை தொடர்பில் தாம் மகிழ்ச்சியடைவதாக சுற்றாடல்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டமை குறித்து வினவிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தற்போது கிடைத்துள்ள அமைச்சுப் பதவி குறித்து திருப்தியடைவதாகவும் அவர் கூறினார்.

தற்போதைய அமைச்சானது சர்வதேச விடயங்களுடன் தொடர்புடையதாகும். எனவே, கிடைக்கப்பெற்றுள்ள அமைச்சு பதவியின் கருமங்களை உரிய வகையில் நிறைவேற்றவுள்ளதாகவும் சுற்றாடல்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டார். (அ)

## ஆசிரியர்கள், அதிபர்கள் மீது கண்ணீர்ப் புகை தாக்குதல்!

**கல்வி அமைச்சுக்கு முன்பாக பதற்றம்**

கொழும்பு, ஒக். 25

**பெலவத்தையில் கல்வி அமைச்சுக்கு முன்பாக அதிபர், ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்புப் பேரணியை கலைக்க பொலிஸார் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டனர்.**

போராட்டக்காரர்கள் வீதியை மறித்து போராடியதால் பொரளை - கொட்டாவ வீதி (174 பஸ் பாதை) தற்காலிகமாக மூடப்பட்டதாக பொலிஸார் அறிவித்தனர்.

ஆசிரியர் - அதிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நேற்று இசுருபாய கல்வி அமைச்சுக்கு முன்பாக இடம்பெற்றது.

ஆசிரியர்களின் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வை வலியுறுத்தியே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பொரளை - கொட்டாவ பிரதான வீதியை மறித்து மூன்று பாலச் சந்தியில் பேரணியாகச் சென்றபோது பொலிஸார் அவர்களை தடுக்க முற்பட்டனர்.




என்றாலும், தடையை மீறி ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்நோக்கி செல்ல முற்பட்டதால் பொலிஸாரால் கண்ணீர்ப் புகை, நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. (அ)

## கெஹலியவை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துங்கள்!

**சரத் பொன்சேகா கோரிக்கை**

கொழும்பு, ஒக். 25

சுகாதார அமைச்சுப் பதவியில் இருந்து கெஹெலிய ரம்புக்வெலவை மாற்றி, அவருக்கு சுற்றாடல் அமைச்சை கொடுப்பதால் எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை. அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சராக பதவி வகித்த கெஹலிய ரம்புக்வெல்லவிடமிருந்து சுகாதார அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டு ரமேஷ் பத்திரனவிடம் கையளிக்கப்பட்டதுடன், சுற்றாடல் அமைச்சு கெஹெலிய ரம்புக்வெலவுக்கு வழங்கப்பட்டது.

ஜனாதிபதியின் இந்த அமைச்சரவை மாற்றத்தை எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்து வருகின்றன.

இந்நிலையில், இதுதொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,

"முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு அமைச்சுப் பதவியல்ல கொடுக்கப்படவேண்டும். மாறாக சுகாதாரத்துறையில் ஏற்பட்டுள்ள பாரிய அழிவுகளுக்காக அவர் கைது செய்யப்படவேண்டும்.

அவர் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அமைச்சுப் பதவியை மாற்றினால் போதாது-என்றார்.




## எல்லைத் தாண்டி மீன் பிடித்த 8 இலங்கை மீனவர்கள் கைது!

சென்னை, ஒக். 25

சர்வதேச கடல் எல்லையில், மீன்பிடி மற்றும் சட்ட விரோத கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்ட 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய கடலோர காவல் படையினர் மற்றும் சுங்கத் துறை அதிகாரிகள் இணைந்து முன்னெடுத்த சோதனையின்போது, அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்கள் மண்டபம் காவல்துறையில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இந்தியாவில் இருந்து மஞ்சள் மற்றும் கடல் அட்டைகள் என்பனவற்றை இலங்கைக்கு கடத்துவதற்கு முற்பட்டபோது, 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், சந்தேகநபர்கள் பயணித்த படகுகளும் கையகப்படுத்தப்பட்டுள்ளன. (அ)

## உள்விவகாரங்களில் தலையிடுவதை அமெரிக்க தூதுவர் நிறுத்தவேண்டும்!

**சரத் வீரசேகர விடுத்துள்ள எச்சரிக்கை**




கொழும்பு, ஒக். 25

இலங்கையின் உள்விவகாரங்கள் தொடர்பான கருத்துக்களை வெளியிடுவதைத் தவிர்க்குமாறு அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கிற்கு தேசிய பாதுகாப்பு தொடர்பான பாராளுமன்றத்தின் துறைசார் கண்காணிப்புக் குழு பரிந் துரை செய்துள்ளது.

பாராளுமன்ற வளாகத்தில் தேசிய பாதுகாப்பு குழுவின் உறுப்பினர்கள், பாதுகாப்புச் செயலாளர், முப்படைத் தளபதிகள், பொலிஸ்மா அதிபர் மற்றும் ஏனைய அரச அதிகாரிகள் ஒன்றுகூடி தேசிய பாதுகாப்பு தொடர் பான விடயங்கள் குறித்து கலந்துரையாடினர்.

இதன்போதே இவ்வாறு குழுவின் ஊடாக பாதுகாப்பு அமைச்சுக்கு பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

2022ஆம் ஆண்டு மே 9ஆம் திகதி அமெரிக்கத் தூது வர் வெளியிட்டிருந்த சில கருத்துகளுக்கு கடுமையான எதிர்ப்புகள் வெளியாகியிருந்த நிலையில் இலங்கையின் உள்விவகாரங்களில் அமெரிக்கத் தூதுவர் தலையிடுவதை நிறுத்தவேண்டுமென ஆளும் மற்றும் சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்த விடயம் மற்றும் ஏனைய சில விடயங்கள் தொடர்பில் தேசிய பாதுகாப்பு தொடர்பான பாராளுமன்றத்தின் துறைசார் மேற்பார்வைக் குழுவில் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது எடுக்கப்பட்ட சில முடிவுகளை கடிதமொன்றின் ஊடாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருக்கு துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஓய்வுபெற்ற ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, அனுப்பியுள்ளார்.

"நிராயுதபாணியான போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை கண்டிப்பதாக பல சர்ச்சைக்குரிய கருத்துகளை அமெரிக்க தூதுவர் வெளியிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் இவ்வாறான கருத்துகள் வெளியிடுவதை அவர் தவிர்க்க வேண்டும். அதற்கான பரிந்துரைகளை முன்வைக்க வேண்டும்" என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரிடம் குறித்த கடிதத்தில் சரத் வீரசேகர கோரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்காவின் கப்பிட்டல் ஹில் கட்டடத்தை உடைத்து சேதம் விளைவித்த எதிர்ப்பாளர்களை அமெரிக்க இராணுவம் எவ்வாறு அடக்கியது என்பது முழு உலகத்துக்கும் தெரியும். அமெரிக்க தூதுவருக்கு சொந்த நாட்டின் அனுபவங்கள் சிறந்த உதாரணங்களாக இருக்கும் எனவும் சரத் வீரசேகர, கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

வியன்னா உடன்படிக்கையின் பிரகாரம் தூதுவர் ஒருவருக்கு மற்றுமொரு நாட்டின் உள்விவகாரங்களில் தலையிட முடியாது என சரத் வீரசேகர சுட்டிக்காட்டியுள்ளதுடன், இத்தகைய தலையீடுகள் தேசிய பாதுகாப்பில் தாக்கங்களை ஏற்படுத்தும். எதிர்காலத்தில் இதுபோன்ற தேவையற்ற கருத்துகளை வெளியிடுவதைத் தவிர்க்குமாறும் வலியுறுத்தினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பாகிஸ்தானை வீழ்த்தியது ஆப்கான்

சென்னை, ஒக். 23

நடப்பு உலகக் கிண்ணத் தொடரின் 22ஆவது போட்டியில் பாகிஸ்தான் அணியை 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது ஆப்கானிஸ்தான் அணி.

இதன் மூலம் ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் முதன்முறையாக பாகிஸ்தான் அணியை வீழ்த்தியுள்ளது ஆப்கானிஸ்தான். நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் கடந்த வாரம் டில்லியில் நடந்த போட்டியில் இங்கிலாந்து அணியை ஆப்கான் வீழ்த்தியிருந்தது.

சென்னை - சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானத்தில் நடந்த இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 282 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணியின் தலைவர் பாபர் அஸாம், 92 பந்துகளில் 74 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

அப்துல்லா ஷஃபீக் 58 ஓட்டங்கள், ஷதாப் கான் மற்றும் இப்திகார் அஹமத் தலா 40 ஓட்டங்கள் எடுத்திருந்தனர். ஆப்கான் சார்பில் நூர் அகமது அதிகபட்சமாக 3 விக்கெட்களை வீழ்த்தியிருந்தார். நடப்பு உலகக்கிண்ண தொடரில் விளையாடும் இளம் வயது வீரர் இவர். ஷபீக், ரிஸ்வான் மற்றும் பாபர் அஸாம் விக்கெட்களை அவர் வீழ்த்தியிருந்தார்.

283 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை ஆப்கான் விரட்டியது. ஆப்கானிஸ்தானால் துரத்திபிடிக்க முடியுமா என்ற நிலையில், அந்த அணியின் முதல் நான்கு துடுப்பாட்ட வீரர்களும் சிறப்பாக ஆடி வெற்றியை வசமாக்கினர்.

ரஹ்மனுல்லா குர்பாஸ் மற்றும் இப்ராஹிம ஸத்ரானும் இணைந்து சிறப்பான தொடக்கம் கொடுத்தனர். இருவரும் 130 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர். ரஹ்மனுல்லா குர்பாஸ், 53 பந்துகளில் 65 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.



பின்னர் ரஹ்மத் ஷாவுடன் இணைந்து இப்ராஹிம் ஸத்ரான் 60 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தார். இப்ராஹிம் ஸத்ரான் 113 பந்துகளில் 87 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். பின்னர் அந்த அணியின் தலைவர் ஹஷ்மதுல்லா ஷாய்தி களம் கண்டார்.

ஹஷ்மதுல்லா ஷாய்தி மற்றும் ரஹ்மத் ஷா இணைந்து ஆட்டத்தை இறுதி வரை நகர்த்தி சென்றனர். 96 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்து ஆப்கானுக்கு வெற்றி தேடி தந்தனர். ஆட்ட நாயகன் விருதை இப்ராஹிம் ஸத்ரான் வென்றார்.

வெற்றிக்கு பிறகு ஆப்கான் வீரர்கள் சென்னை மைதானத்தை வலம் வந்து பார்வையாளர்களுக்கு நன்றி தெரிவித்தனர். (ஐ)

# அரையிறுதி போட்டிக்கு முன்னேறுமா பாகிஸ்தான்?




புதுடில்லி, ஒக். 25

உலகக் கிண்ணத்தில் தொடர் தோல்விகளை சந்தித்து வரும் பாகிஸ்தான் அணிக்கு அரையிறுதி சுற்றுக்கு தகுதி பெறும் வாய்ப்பு குறைவாகவே உள்ளது.

இந்தியாவில் உள்ள பல்வேறு நகரங்களில் உலகக் கிண்ண ஒருநாள் தொடர் நடைபெற்று வருகின்றன. தற்போது லீக் சுற்றுகள் நடைபெற்று வரும் நிலையில், முதல் நான்கு இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெறவுள்ளன.

இதுவரை விளையாடிய போட்டிகளின் அடிப்படையில் புள்ளிப்பட்டியலில் 5 வெற்றிகளுடன் இந்திய அணி முதல் இடத்தில் உள்ளது. நியூசிலாந்து, தென்னாபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா அணிகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

மேலும், புள்ளிப்பட்டியலில் ஐந்தாவது இடத்தில் உள்ள பாகிஸ்தான் அணி அடுத்து விளையாடவுள்ள அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெற்றால் மட்டுமே அரையிறுதி வாய்ப்பை உறுதி செய்ய வாய்ப்புள்ளது.

இதுவரை பாகிஸ்தான் விளையாடிய 5 போட்டிகளில் இலங்கை மற்றும் நெதர்லாந்து அணிகளுடன் மோதிய முதல் 2 போட்டிகளில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளன.

இந்தியா, அவுஸ்திரேலியா மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுடன் மோதிய கடைசி மூன்று போட்டிகளிலும் தோல்வியை சந்தித்துள்ளது பாகிஸ்தான்.

அடுத்து தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, பங்களாதேஷ், இங்கிலாந்து அணிகளுடன் மோதும் போட்டியில் ஒன்றில் தோல்வி அடைந்தால்கூட அரையிறுதி வாய்ப்பு மிகக் குறைவுதான்.

# “தோல்வி வலி தருகின்றது!”




சென்னை, ஒக். 25

ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான தோல்வி எங்களுக்கு வலி கொடுக்கிறது என்று பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவர் பாபர் அஸாம் தெரிவித்துள்ளார்.

சென்னை - சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி 8 விக்கெட்களால் வெற்றி பெற்றது.

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் 5 போட்டிகளில் விளையாடி 2 வெற்றிகளை ஆப்கான் மற்றும் பாகிஸ்தான் அணிகள் பெற்றுள்ளன. ஓட்டவீத அடிப்படையில் பாகிஸ்தான் 5ஆவது இடத்திலும், ஆப்கான் 6ஆவது இடத்திலும் உள்ளது.

“இந்த தோல்வி வலி கொடுக்கிறது. நாங்கள் சிறப்பாக துடுப்பாடியது செய்தோம். நல்ல இலக்கை நிர்ணயித்தோம். ஆனால், எங்கள் பந்து வீச்சு சிறப்பானதாக அமையவில்லை. நடுவரிசை ஓவர்களில் நாங்கள் விக்கெட் வீழ்த்த தவறினோம். பௌண்ட்ரிகளை தடுக்க தவறினோம். அதனால் ஓட்டங்களை கொடுத்தோம். சுழல் பந்து வீச்சாளர்கள் சரியான லெந்தில் பந்து வீசவில்லை.

ஆப்கான் அணி பந்துவீச்சு, துடுப்பாட்டம், களத்தடுப்பு என மூன்றிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. அதனால்தான் அவர்கள் வெற்றி பெற்றார்கள். எங்களது பந்து வீச்சு மற்றும் களத்தடுப்பு சிறப்பானதாக இல்லை. அடுத்த போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முயற்சிப்போம்” என பாபர் அஸாம் தெரிவித்தார். (ஐ)

# அழுத்தமான சூழலில் கோலி சிறப்பாக ஆடினார்!

## டரில் மிட்செல் தெரிவிப்பு

புதுடில்லி, ஒக். 25

அழுத்தமான சூழலில் விராட் கோலியின் சிறந்த துடுப்பாட்டம் இந்திய அணிக்கு வெற்றியைப் பெற்றுத் தந்ததாக நியூசிலாந்து அணியின் டரில் மிட்செல் தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ணத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த போட்டியில் இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகள் மோதின. இந்தப் போட்டியில் இந்திய அணி 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்தை வீழ்த்தியது. இந்தப் போட்டியில் இந்திய அணியின் சார்பில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய விராட் கோலி 95 ஓட்டங்கள் எடுத்து அணியின் வெற்றிக்கு வித்திட்டார். இந்த வெற்றியின் மூலம் புள்ளிப்பட்டியலில் இந்திய அணி முதலிடத்துக்கு முன்னேறியது.

இந்த நிலையில், அழுத்தமான சூழலில் விராட் கோலியின் சிறந்த துடுப்பாட்டம் இந்திய அணிக்கு வெற்றியைப் பெற்றுத் தந்ததாக நியூசிலாந்து அணியின் டரில் மிட்செல் தெரிவித்துள்ளார்.

மேலும், விராட் கோலி உலகத் தரத்திலான வீரர். அழுத்தமான சூழலில் அவர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இந்திய அணிக்கு வெற்றியைப் பெற்றுத் தந்துள்ளார். அவர் சதம் அடிக்காவிட்டாலும் இந்திய அணிக்கு வெற்றியைப் பெற்றுத் தந்துவிட்டார். எங்களது பந்துவீச்சாளர்கள் சிறப்பாக செயல்பட்டார்கள். நாங்கள் விக்கெட்டை கைப்பற்ற பல உத்திகளைக் கையாண்டோம். எங்களது பந்துவீச்சை நினைத்து நான் பெருமைப்படுகிறேன் - என்றார்.



# ஆஸி. - நெதர்லாந்து இன்று மோதுகின்றன




சென்னை, ஒக். 25

உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரில் இன்று புதன்கிழமை நடைபெறும் போட்டியில் அவுஸ்திரேலியா - நெதர்லாந்து அணிகள் மோத உள்ளன.

உலகக் கிண்ணத் தொடர் இந்தியாவில் நடக்கிறது. இந்த தொடரில் இதுவரை நடந்து முடிந்துள்ள போட்டிகளின் முடிவில் இந்தியா, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா அணிகள் புள்ளிப்பட்டியலில் முதல் 4 இடங்களில் உள்ளன.

இந்நிலையில் தொடரில் இன்று நடைபெறும் போட்டியில் 5 முறை உலக சம்பியனான அவுஸ்திரேலிய அணி நெதர்லாந்தை சந்திக்கவுள்ளது. முதல் இரு போட்டிகளில் தோல்வி அடைந்த அவுஸ்திரேலியா அடுத்த இரு போட்டிகளில் வெற்றி பெற்று புள்ளிப்பட்டியலில் 4ஆவது இடத்தில் உள்ளது. இன்று நடைபெறும் போட்டியில் நெதர்லாந்தை வீழ்த்தி ஹட்ரிக் வெற்றியை பதிவு செய்யும் முனைப்பில் அவுஸ்திரேலியா உள்ளது.

இதேவேளையில் தங்களது முதல் இரு போட்டிகளில் தோல்வி அடைந்த நெதர்லாந்து 3ஆவது போட்டியில் தென்னாபிரிக்காவுக்கு அதிர்ச்சி அளித்தது. இதையடுத்து 4ஆவது போட்டியில் தோல்வி கண்ட நெதர்லாந்து தங்களது 2ஆவது வெற்றியை பெறும் முனைப்பில் உள்ளது. இதனால், போட்டியில் பரபரப்புக்கு பஞ்சம் இருக்காது.

# கனடாவுக்கு அமெரிக்கா, பிரிட்டன் ஆதரவு: இந்தியாவின் நடவடிக்கையை எதிர்ப்பது ஏன்?

கனடா மண்ணில் சீக்கிய பிரிவினைவாதத் தலைவர் கொல்லப்பட்ட விவகாரத்தில் ஏற்பட்ட கசப்பைத் தொடர்ந்து 41 கனடா தூதரக அதிகாரிகள் இந்தியாவை விட்டு வெளியேறியுள்ளனர்.

இந்தியா இரண்டு வாரங்களுக்கு முன்பு கனடாவை அதன் தூதரக ஊழியர்களை குறைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டது. அவர்கள் தங்கியிருந்தால் அவர்களுக்கான ராஜாங்க சட்ட விலக்குகளை நீக்கிவிடப் போவதாகவும் இந்தியா கூறியிருந்தது. கனடா இதை 'சர்வதேச சட்ட மீறல்" என்று கூறியது.

ஜூன் 18 ஆம் தேதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டதற்குப் பின்னணியில் இந்தியா இருப்பதாக கனடா குற்றம் சாட்டியதைத் தொடர்ந்து உறவுகளில் பதற்றம் ஏற்பட்டது.






பல வாரங்களாக இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையே நிலவி வரும் பதற்றத்தில் இப்போது அமெரிக்காவும் பிரிட்டனும் நுழைந்துள்ளன.

இந்தியாவில் கனடாவின் தூதரக அலுவலர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்று இந்தியா தொடர்ந்து வலியுறுத்தக் கூடாது என்று அமெரிக்காவும் பிரிட்டனும் கூறியுள்ளன.

**கொந்தளித்த ஜஸ்டின் ட்ரூடோ**

கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறுகையில், 'இந்த வாரம் இந்திய அரசு எடுத்த நடவடிக்கைகள் சர்வதேச சட்டத்திற்கு முரணானது. இந்தியாவில் உள்ள 41 கனேடிய தூதர்களின் ராஜாங்க சட்ட விலக்குகளை தன்னிச்சையாக ரத்து செய்ய இந்திய அரசு முடிவு செய்தது.

இது வியன்னா ஒப்பந்தத்தை மீறும் செயல். உலகில் உள்ள அனைத்து நாடுகளும் கவலைப்பட வேண்டிய விஷயம் இது. கனேடிய மண்ணில் கனேடிய குடிமகன் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் விஷயத்தில் இந்தியா சர்வதேச சட்டத்தைக் கடுமையாக மீறியதாக நாங்கள் முன்வைத்த குற்றச்சாட்டுகளை இந்தச் செயல்களின் மூலம் இந்தியா ஒதுக்கி வைக்கிறது.

இந்திய அரச, இந்தியாவிலும், கனடாவிலும் உள்ள லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையை நம்ப முடியாத அளவிற்கு இது கடினமாக்குகிறது," எனக் கூறியுள்ளார்.

**அமெரிக்கா என்ன சொன்னது?**

அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் மேத்யூ மில்லர், "இந்திய அரசு இந்தியாவில் கனடா நாட்டு தூதரக அலுவலர்களின் எண்ணிக்கையைக் குறைக்குமாறு கனடாவைக் கேட்டுக் கொண்டது, அந்த வேண்டுகோளின் பேரில் கனடா தூதர்களை திரும்ப அழைத்துள்ளது. கனடா தூதர்கள் இந்தியாவிலிருந்து வெளியேறுவது குறித்து நாங்கள் கவலைப்படுகிறோம்," என்றார்.

இந்தியா மீது கனடா சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து தீவிரம் காட்டுவதாக அமெரிக்கா ஏற்கெனவே தெரிவித்திருந்தது.

வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில், "பரஸ்பர கருத்து வேறுபாடுகளைத் தீர்க்க தூதரக உறவு பலமாக இருப்பது மிகவும் முக்கியம். கனடா தனது தூதர்கள் இந்தியாவில் இருப்பதைக் குறைக்க வேண்டும் என்ற பார்வை நீடிக்கக் கூடாது என்று நாங்கள் இந்திய அரசிடம் கேட்டுக்கொண்டுள்ளோம்," என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில் கனடாவின் விசாரணைக்கு இந்தியாவும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கை கோருகிறது.

"இந்தியா 1961 ஆம் ஆண்டு தூதரக உறவுகளுக்கான வியன்னா உடன்படிக்கைக்கு உட்பட்டு, கனடா தூதரகப் பணிகளின் உறுப்பினர்களுக்குத் தகுதியான வசதிகள் மற்றும் தூதரக விலக்குகளை வழங்கும் என்று நாங்கள் நம்புகிறோம்." என்று அதில் கூறப்பட்டுள்ளது.

கனடாவின் விசாரணையில் இந்தியா ஒத்துழைக்க வேண்டும் என ஏற்கெனவே அமெரிக்காவும், பிரிட்டனும் கேட்டுக் கொண்டுள்ளன.

**பிரிட்டன் என்ன சொன்னது?**

இது தொடர்பாக பிரிட்டன் வெளியுறவு அமைச்சகமும் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. பிரிட்டன் அமைச்சகத்தின் அறிக்கை அமெரிக்க அரசின் அறிக்கையுடன் ஓரளவு ஒத்துப்போகிறது.


Matthew Miller
@StateDeptSpox

The United States is concerned by the departure of Canadian diplomats from India. We have urged the Indian government not to insist upon a reduction in Canada's diplomatic presence and to cooperate in the ongoing Canadian investigation.

STATEMENT BY
Spokesperson Matthew Miller
U.S. DEPARTMENT of STATE
state.gov

3:20 AM · Oct 21, 2023 · 171.4K Views

பரஸ்பர கருத்து வேறுபாடுகளைத் தீர்க்க, இரு நாடுகளின் தலைநகரங்களில் தூதர்கள் இருப்பது அவசியம் என்றும், இரு நாடுகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை தொடர வேண்டும் என்றும் அமைச்சகம் தனது அறிக்கையில் கூறியுள்ளது.

"பல கனடா நாட்டு தூதர்கள் இந்தியாவை விட்டு வெளியேற காரணமான இந்திய அரசின் முடிவில் நாங்கள் உடன்படவில்லை. 1961 வியன்னா தூதரக உறவுகள் உடன்படிக்கையின் கீழ் இரு தரப்பினரும் தங்கள் கடமைகளுக்குக் கட்டுப்படுவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். ஒருதலைப்பட்சமாக தூதரக அலுவலர்களை நீக்கம் செய்வது, அவர்களைப் பாதுகாப்பது மற்றும் அவர்களுக்கான தூதரக அதிகாரம் மற்றும் சலுகைகளை மறுப்பது வியன்னா மாநாட்டின் கொள்கைகள் அல்லது அதன் பயனுள்ள செயல்பாடுகளுக்கு முரணானது."

ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை வழக்கின் பாரபட்சமற்ற விசாரணையில் கனடாவுடன் தொடர்பில் இருக்க இந்தியாவை தொடர்ந்து ஊக்குவிப்போம் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**கனடாவுக்கு விசா பெறுவதில் சிக்கல் ஏற்படுமா?**

இதற்கிடையே கனடாவின் வெளியுறவு அமைச்சர் மெலனி ஜோலி, இந்தியாவில் உள்ள பல கனடா தூதரக அதிகாரிகளும் அவர்களைச் சார்ந்தவர்களும் நாட்டை விட்டு வெளியேறிவிட்டனர் என்பதை உறுதிப்படுத்தினார்.

அக்டோபர் 20 ஆம் தேதிக்குள் '21 தூதரக அதிகாரிகளைத் தவிர மற்ற அனைவருக்கும்" ராஜாங்க சட்ட விலக்கு "தன்னிச்சையாக அகற்றப்படும்" என்று இந்தியா கூறியதாக அவர் தெரிவித்தார்.

கனடாவில் உள்ள இந்திய தூதரகத்தைத் தொடர்பு கொண்டு இது தொடர்பாக பிபிசி கருத்து கேட்டிருக்கிறது.

மீதமுள்ள 21 தூதரக அதிகாரிகள் இன்னும் இந்தியாவில் இருப்பதாகவும், இருப்பினும் பணியாளர்கள் பற்றாக்குறையால் கனடா தனது சேவைகளை நாட்டில் குறைக்க வேண்டியிருக்கும் என்று ஜோலி கூறினார்.

பெங்களூர், மும்பை, சண்டிகரில் மக்கள் நேரில் வந்து பெறும் சேவைகளுக்கு தடையாக இருக்கும் என்று ஜோலி கூறினார். இந்தச் சேவைகள் எப்போது மீண்டும் தொடங்கும் என்பது குறித்த காலக்கெடு எதுவும் இல்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

**மாணவர்களுக்கு என்ன பாதிப்பு?**

டில்லியில் உள்ள கனடா தூதரகத்தில் சேவைகள் தொடர்ந்து கிடைக்கும் எனவும், மூன்றாம் தரப்பு மூலம் மேற்கொள்ளப்படும் சேவைகளும் தொடரும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், பணியாளர்களின் குறைப்பால் குடியேற்ற விண்ணப்பங்களுக்கான செயலாக்கத்தில் தாமதம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என கனடா குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் கூறினார்.

முக்கியமாக கனடாவில் படிக்க விரும்பும் மாணவர்கள் உட்பட இந்திய குடிமக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

2022 கணக்குப்படி கனடாவில் தற்காலிக, நிரந்தர குடியேற்றத்துக்கான விண்ணப்பதாரர்களில் இந்தியர்களே அதிகம்.

கனடா தலைநகர் ஒட்டாவாவில் உள்ளதை விட டில்லியில் அதிகமான தூதரக அதிகாரிகள் இருப்பதாக இந்தியா கூறுகிறது. இரு நாடுகளுக்கும் இடையே மோதல் வெடித்த நிலையில், இந்த எண்ணிக்கை சமமாக இருக்க வேண்டும் என்றும் இந்தியா கோரியது.

ஆயினும், ஒட்டாவாவில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளைப் பட்டியலிட்டுள்ள உலகளாவிய விவகார இணையதளம், இந்த எண்ணிக்கை சம அளவிலேயே இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

கனடா தூதரக அதிகாரிகளுக்கான ராஜாங்க சட்ட விலக்குகளை நீக்குவதாக இந்தியா கூறுவது "சர்வதேச சட்டத்தை மீறுவதாகும்" என்று ஒட்டாவாவில் செய்தியாளர் சந்திப்பின் போது ஜோலி கூறினார். இருப்பினும் இதற்காக கனடா பதிலடி கொடுக்காது என்றும் அவர் கூறினார்.

"ராஜாங்க சட்ட விலக்கு விதிமுறைகளை மீற நாம் அனுமதித்தால், உலகத்தில் எங்கும் எந்தத் தூதரக அதிகாரியும் பாதுகாப்பாக இருக்க மாட்டார்கள்" என்று ஜோலி கூறினார்.

கனடாவைச் சுற்றிப் பார்க்க அல்லது குடியேற விரும்பும் இந்தியர்களை கனடா இன்னும் வரவேற்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். ●

# குழப்பநிலையை மேலும் சிக்லாக்கும் தேர்தல் திகதிகளும் தேர்தல் சீர்திருத்தங்களும்

தற்போது நடைமுறையில் இருக்கும் தேர்தல் சட்டங்களையும் ஒழுங்கு விதிகளையும் ஆராய்ந்து மாற்றங்களை முன்மொழிவு செய்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்டிருக்கும் விசாரணை ஆணைக்குழு முன்கூட்டிய பேச்சுவார்த்தையோ அல்லது முன்னறிவிப்போ இன்றி வந்திருக்கிறது. அது பொதுமக்களின் கவனத்துக்கு கொண்டுவரப்படும் வரை மிகுந்த எச்சரிக்கையுடன் ஒரு இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.

தற்போதைய தேர்தல் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் சகலவற்றையும் ஆராய்ந்து சமகாலத் தேவைகளுக்கு பொருத்தமான முன்மொழிவுகளைச் செய்யும் பணி ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதற்குரிய நிபந்தனைகளின் பிரகாரம் விசேட பரிசீலனைக்கு எடுக்கப்படவேண்டிய விடயங்களில் பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல், அச்சடிக்கப்பட்ட வாக்குச்சீட்டுகளுக்கு பதிலாக நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இலத்திரனியல் வாக்களிப்பை அறிமுகப்படுத்தல் மற்றும் வெளிநாடுகளில் இருக்கும் இலங்கையர்கள் வாக்களிப்பதற்கு வசதி செய்தல் என்பவையும் அடங்குகின்றன.

இவை மெச்சத்தக்கவை. ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை வழமைக்கு மாறான ஏற்பாடுகளையும் இது உள்ளடக்கியிருக்கிறது. உதாரணமாக, ஆட்சிமுறையின் இரு வேறு மட்டங்களில் இரு தேர்தல்களில் ஒருவர் போட்டியிடுவதற்கும் மக்களால் தெரிவுசெய்யப்பட்டால் அவர் இரு சபைகளிலும் அங்கம் வகிப்பதற்கும் வகைசெய்வதற்கான ஏற்பாட்டைக் குறிப்பிடலாம். அத்துடன் ஆணைக்குழு நியமிக்கப்பட்ட நேரமும் கவனத்துக்குரியதாகிறது.







உத்தேசிக்கப்படும் மாற்றங்கள் கடுமையான சிந்தனைக்கு எடுக்கப்படவேண்டியவையாக இருக்கின்றன.

முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு ஆணைக்குழுவுக்கு அடுத்த வருடம் ஏப்ரில் மாதம் வரை கால அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கும் நிலையில் அடுத்த ஆறு மாதங்களுக்கு எந்த தேர்தலும் நடைபெறுவது சாத்தியமில்லை என்றாகிறது. மாற்றங்களை நடைமுறைப் படுத்துவதற்கான சட்டரீதியான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் ஒரு குறிப்பிட்ட காலம் எடுக்கும்.

ஆணைக்குழுவின் முன்மொழிவுகளை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க வேண்டியிருக்கும். அமைச்சரவையின் அங்கீகாரத்துக்கு பிறகு அவற்றை பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கவேண்டும்.

அதையடுத்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்கு முன்னதாக அவை அரசியலமைப்புக்கு இசைவானவையா இல்லையா என்பதை தீர்மானிக்கக் கோரி தாக்கல் செய்யப்படக்கூடிய மனுக்களை உயர்நீதிமன்றம் விசாரித்து அதன் தீரப்பைக் கூறவேண்டும்.

ஆணைக்குழு அதற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கும் பணியை ஆறு மாதங்களில் நிறைவுசெய்வது மிகவும் கடினமானதாக இருக்கும். முன்மொழிவுகளை விரிவான பொதுக் கலந்துரையாடலுக்கு உட்படுத்த வேண்டியிருக்கும் இதற்கு நீண்ட காலம் தேவை. ஒரு வருடம் கூட தேவைப்படக்கூடும் என்று முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பில் சட்டவரைவு ஒன்றை தயாரித்திருப்பதாக கடந்தவார முற்பகுதியில் நீதியமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ச செய்த இன்னொரு அதிர்ச்சியான அறிவிப்புக்கு பிறகு விசாரணை ஆணைக்குழுவை ஜனாதிபதி திடீரென்று நியமித்து ஒரு புதிராக இருக்கிறது.

விஜேதாச முன்வைத்திருக்கும் தேர்தல் சீர்திருத்த யோசனைகளின் பிரகாரம் 225 ஆசனங்களைக் கொண்ட பாராளுமன்றத்தின் 160 உறுப்பினர்கள் தொகுதி அடிப்படையிலும் மீதி 65 உறுப்பினர்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவ வாக்களிப்பு முறையின் கீழ் பெறப்பட்ட வாக்குகளின் அடிப்படையில் தேசியப்பட்டியல் மற்றும் மாவட்ட பட்டியலின் மூலமும் தெரிவுசெய்யப்படுவர்.

விஜேதாச ராஜபக்சவின் யோசனைகள் புதிதாக நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவின் பொறுப்பு எல்லைக்குள் வருகின்றன. கிட்டத்தட்ட ஏககாலத்திலான இரு அறிவிப்புக்களும் பொதுமக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தக் கூடியவை.

அரசியலமைப்பின் பிரகாரம் தேர்தல்களை நடத்த வேண்டிய காலம் நெருங்கும்போது தேர்தல் சீர்திருத்தங்களும் அவற்றை நடைமுறைப் படுத்துவதற்கு அவசியமான எல்லை நிர்ணய செயன்முறைகளும் அரசியல் மோதலுக்கு வழிவகுக்கக்கூடிய உறுதியற்ற ஒரு சூழலை உருவாக்கக்கூடியவையாக இருக்கின்றன.

### சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு

தேர்தல் காலப்பகுதி ஒன்றில் பணமும் நம்பகத்தன்மையும் மிகவும் முக்கியமான தேவைகளாக இருக்கும் நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி விரைவில் விடுவிக்கப் படவிருப்பதாக கடந்தவாரம் வந்த அறிவிப்பு அரசாங்கத்தைப் பொறுத்தவரை மகிழ்ச்சியான ஒரு செய்தியாகும். அரசியல் அரங்கில் தனது போட்டியாளர்களை விடவும் சர்வதேச வளங்களை பெரிய அளவில் பெற்றுக் கொள்ளக்கூடிய தகுதிநிலையில் இருப்பதாக அரசாங்கம் மக்களை நம்பவைப்பதற்கு இது உதவும்.

அரசாங்கத்துக்கு சர்வதேச முறைமைக்குள் (சர்வதேச நாணய நிதியமும் அதன் ஒரு அங்கம்) வலுவான ஆதரவு இருக்கிறது என்பதற்கு இது ஒரு அறிகுறியாகும். அதற்குரிய பெருமை ஜனாதிபதிக்கே உரியது எனலாம்.

சர்வதேச நாணய நிதியத்தின் அறிவுறுத்தல்களுக்கும் அதன் இரண்டாவது தவணைக் கொடுப்பனவின் தாமதத்துக்கும் அரசாங்கத்தின் ஒரே தெளிவான பதிலளிப்பு மின்கட்டணங்களின் அதிகரிப்பாகவே இருந்தது. பட்ஜெட் பற்றாக்குறையை சிறியதாக்க வேண்டும் என்ற சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு இணங்க வருவாயை அதிகரிக்க இவ்வாறு அரசாங்கம் செய்ய வேண்டியிருக்கிறது. இது பொருளாதாரத்தில் நம்பிக்கையை ஏற்படுத்தும் என்பதுடன் சர்வதேச கடன் வழங்குநர்களுடனான கடன் மறுசீரமைப்புச் செயன்முறையை துரிதப்படுத்தவும் உதவும் என்று அரசாங்க அமைச்சர்கள் கூறியிருக்கிறார்கள்.

**தங்களது அதிகாரம் தற்காலிகமானது என்பதையும் என்ன காரணமாக இருந்தாலும் மக்களின் வாக்குரிமையை நிராகரிப்பதற்கு தங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்பதையும் அதிகாரத்தில் இருப்பவர்கள் விளங்கிக் கொள்ளவேண்டியது அவசியமாகும்.**

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியின் இரண்டாவது தவணைக் கொடுப்பனவு விடுவிப்பு எதிர்பார்க்கப்பட்டதை விடவும் விரைவாக வந்திருக்கிறது. இரண்டாவது தவணைக் கொடுப்பனவை பெறுவதற்கு அரசாங்கத்தின் வருவாய் சேகரிப்பு போதுமானதாக இல்லை என்று சர்வதேச நாணய நிதியம் முன்னர் அறிவித்திருந்தது.

ஆட்சிமுறை தொடர்பிலான பிரச்சினை மேலும் கடுமையானதாகியிருக்கிறது என்று தெரிகிறது. கடுமுனைப்பான ஆட்சிமுறைப் பலவீனங்களையும் ஆழமாக வேரூன்றிவிட்ட ஊழலையும் கையாளுவதற்கு முன்னுரிமை கொடுத்து முன்னெடுக்கவேண்டிய 16 நடவடிக்கைளை உள்ளடக்கிய ஆட்சிமுறை குறைபாடுகள் **(Governance Diagnostic Assesment)** மதிப்பீட்டை சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டிருக்கிறது.

அபிவிருத்திக்கு முன்தேவையாக இருக்கும் இந்த விவகாரங்களில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் மெச்சத்தக்கவையாக இருக்கவில்லை.



**கலாநிதி ஜெகான் பெரேரா**

ஜனநாயக நியமங்களையும் சட்டத்தின் ஆட்சியையும் முறையாக பின்பற்றுவதில் அரசாங்கத்தின் கடந்தகால நடத்தைகள் நம்பிக்கை தருபவையாக இருக்கவில்லை. உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு அதனாலியன்றவரை முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், அரசாங்கம் அந்த தேர்தல்களை ஒத்திவைத்தது.

உள்ளூராட்சி தேர்தல்களை நடத்தும் நோக்கத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதியை தேர்தல் ஆணைக்குழுவுக்கு விடுவிக்காமல் நிறுத்திவைக்கக்கூடாது என்று உயர்நீதி மன்றம் வழங்கிய உத்தரவையும் கூட அரசாங்கம் மதிக்கத் தவறியது.

ஏனைய சர்வதேச கடன் வழங்குநர்களுக்கு ஏற்புடையதான கடன் நிவாரணம் தொடர்பில் இலங்கையுடன் பூர்வாங்க உடன்பாட்டை எட்டியிருப்பதாக சீன அரசாங்கம் அறிவித்த கையோடு சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணைக் கொடுப்பனவு விடுவிக்கப்படவதாக அறிவிப்பு வந்திருப்பது முக்கியமாக கவனிக்க வேண்டிய அம்சமாகும்.

இரண்டாவது தவணைக் கொடுப்பனவை தற்போதைக்கு வழங்குவதில்லை என்று இரு வாரங்களுக்கு முன்னர் சர்வதேச நாணய நிதியம் எடுத்த தீர்மானத்தில் செய் யப்பட்ட மாற்றத்தின் மீது இலங்கை அரசாங்கத்துக்கும் சீனாவின் எக் ஸிம் வங்கிக்கும் இடையில் காணப்பட்ட உடன்பாடு தாக்கத்தைச் செலுத்தவில்லை என்று கூறிவைக்க வேண்டும் என்று நாணய நிதியத்தின் அதிகாரிகள் உணர்ந்தமையும் கவனிக்கத்தக்கது.

இது சர்வதேச வல்லாதிக்க முகாம்களுடன் பேச்சுவார்த்தைகள் என்று வரும்போது மிகவும் விவேகமாக அணுகுமுறைகளை கடைப்பிடிக்கும் ஒரு தலைவர் என்ற ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் மதிப்பை மேலும் உயர்த்தியிருக்கிறது.

ஆனால் நாட்டுக்குள் பொதுமக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதில் அவருக்கு உள்ள சவால் தொடரவே செய்கிறது. அதற்கு பாதுகாப்பு படைகள் மற்றும் பாதுகாப்பு சடடங்கள் மூலமாக மக்களை அடக்குவதற்கு பதிலாக சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்கள் மூலமாக மக்களின் ஆணையை வென்றெடுப்பது அவசியமாகும்.

### ஒத்திவைக்கப்பட்ட தேர்தல்கள்

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணைக் கொடுப்பனவைப் பெறும் கையோடு ஜனாதிபதி விக்கிரமசிங்க அரசாங்கம் அண்மைய எதிர்காலத்தில் தேர்தல்களை நடத்தாமல் அதிகாரத்தில் இருப்பதற்கு திட்டமிடுகிறது என்று மக்கள் மத்தியில் உள்ள ஐயத்தை தணிக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்திருக்கிறார் போன்று தெரிகிறது.

தேர்தல்களை தற்போதைக்கு தவிர்ப்பது இடம்பெற்றுவருகின்ற பொருளாதார மேம்பாடுகளை வலுப்படுத்துவதற்கு அவசியமானது என்ற வகையிலான கருத்துக்களை அரசாங்கத்தின் அரசியல் நேச சக்திகளுக்கு புறம்பாக சில வர்த்தகத்துறை தலைவர்களும் பொருளாதார நிபுணர்களும் வெளியிட்டு வந்திருக்கிறார்கள்.

(16ம் பக்கம் பார்க்க)

# அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு ஆடு

*2023 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின் கீழ் நாடளாவிய ரீதியில் கிராமிய பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக உத்தேசிக்கப்பட்ட ஆடு வளர்ப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் எண்ணக்கருவிற்கு அமைய விவசாய அமைச்சின் கீழ் இயங்குகின்ற கிராமிய பொருளாதாரப் பிரிவினால் கிராமப்புற மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் நோக்கில் தெரிவு செய்யப்பட்ட 7 பயனாளிகளுக்கு தலா 3 ஆடுகள் வீதம் வழங்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எம். ஏ. சி. அகமது ஷாபிர் தலைமையில் இடம்பெற்றது.*

*இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் நஹீஜா முசாபிர்,உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ. எல். ஏ. மஜீட், அட்டாளைச்சேனை கால்நடை வைத்திய அதிகாரி எச். டகானா, கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். ஏ. எம். எஸ். ஹரிஸ் மௌலானா, பிரதேச செயலக விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ. எஸ். சபானா, எம். ஏ. சிபானா பானு, கமத்தொழில் அமைச்சின் கால்நடை பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பி. எம். எம். நஸபி மற்றும் பயனாளிகள் உட்பட பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (அ)*



# குழப்பநிலையை மேலும் சிக்லாக்கும்...

*(15ம் பக்கத் தொடர்ச்சி)*

*முழுமையான நிலைவரமாகக் கூறமுடியாவிட்டாலும், மக்களில் பெரும்பான்மையானவர்களின் வாழ்க்கைத்தரங்கள் சீர்கெட்டுக்கொண்டே போகிறது என்பது கவலைக்குரிய யதார்த்தமாகும். இவ்வருடம் வறுமை மட்டம் 25 சதவீதமாக உயர்ந்திருப்பதாகவும் அடுத்த வருடம் அது 28 சதவீதமாகும் என்றும் உலகவங்கி புள்ளி விபரங்கள் காட்டுகின்ற அதேவேளை உலக சுகாதார நிறுவனத்தின் புள்ளிவிபரங்கள் மந்தபோசாக்கு அதிகரிப்பதை காட்டுகின்றன. 20 சதவீதத்துக்கும் குறைவான மக்கள் ஆதரவையே அரசாங்கம் கொண்டிருக்கிறது என்று கருத்துக்கணிப்புகள் மூலம் அறியக்கூடியதாக இருந்தது.*

*கடந்த ஒரு சில வாரங்களாக வெளியான பல்வேறு அறிவிப்புகள் அரசாங்கம் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலையும் பாராளுமன்ற தேர்தலையும் ஒத்திவைப்பதற்கு அல்லது சாத்தியமானால் நடத்தாமலே விடுவதற்கு உத்தேசிக்கிறது என்ற ஊகங்கள் கிளம்புவதற்கு வழிவகுத்திருக்கிறது.*

*நாட்டு நலனைக் கருத்திற்கொண்டு அடுத்த ஜனாதிபதி தேர்தலில் எவரும் போட்டியிடக்கூடாது என்று ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன அண்மையில் கூறியிருந்தார்.*

*“அவ்வாறு எவரும் போட்டியிட முன்வராவிட்டால் தற்போதைய ஜனாதிபதி தொடர்ந்தும் பதவியில் இருந்து நாட்டை முன்னேற்றக்கூடியதாக இருக்கும். போட்டியிட விரும்பும் எவரும் தங்களின் பொருளாதாரச் செயற்திட்டங்களை பாராளுமன்ற கட்டிடத்தொகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் பட்ஜெட் அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம். அந்த யோசனைகளை பட்ஜெட் அலுவலகம் பரிசீலனைக்கு உட்படுத்தி அவை யதார்த்தபூர்வமானவையா இல்லையா என்பதை கூறமுடியும். அந்த அலுவலகத்தினால் நிராகரிக்கப்படக்கூடிய செயற்திட்டத்தை எந்தவொரு வேட்பாளரும் எந்த தேர்தலிலும் மக்கள் முன்னிலையில் வைக்க முடியாது. தவிரவும், இலங்கை வங்குரோத்து அடைந்துவிட்டது என்று உத்தியோகபூர்வமாக பிரகடனப்படுத்தப்பட்ட ஒரு நிலைவரத்துக்கு மத்தியில் வேறு மாற்று வழி இல்லை. இந்த நிலையில் ஜனாதிபதி தேர்தல் ஒன்றுக்காக நிதியைச் செலவிடுவது விவேகமானதா என்பதை சிந்தித்துப்பார்க்கவேண்டும்” என்று வஜிர அபேவர்தன கூறினார்.*

*ஐக்கிய தேசிய கட்சியின் விசேட தேசிய மகாநாட்டில் கடந்த வாரம் உரையாற்றிய ஜனாதிபதி விக்கிரமசிங்க அரசாங்கம் மீதான தனது அதிகாரப்பிடி குறித்து மிகுந்த நம்பிக்கை கொண்டவராக இருப்பதை அரசியலமைப்பின் பிரகாரம் உரிய கால அட்டவணையில் தேர்தல்கள் நடைபெறும் என்ற அவரின் கூற்று உணர்த்தியது.*

*அடுத்தவருடம் ஜனாதிபதி தேர்தலும் அதைத் தொடர்ந்து பாராளுமன்ற தேர்தலும் நடத்தப்படும் என்று அவர் கூறினார். 2025 உள்ளூராட்சி தேர்தல்கள் 2025 முதல் அரையாண்டுக்குள் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்ற ஜனாதிபதியின் அறிவிப்பை மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்படவேண்டிய தேவை இருக்கிறது. அந்த தேர்தல்கள் இவ்வருடம் மார்ச் மாதத்தில் நடத்தப்பட்டிருக்க வேண்டியவையே தவிர மேலும் இர வருடங்களுக்கு பிற்போடக்கூடியவை அல்ல.*

*மேலும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு, சர்வஜன வாக்கெடுப்பு, பாராளுமன்ற தேர்தல் சீர்திருத்தம் குறித்தும் அறிவிப்புகள் வெளியாகியிருக்கின்றன. இவை தனித்தனியாகவும் கூட்டாகவும் தேர்தல்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவை. தேர்தல்கள் தொடர்பில் அடாத்தான முறையில் தீர்மானங்களை எடுக்கக்கூடாது.*

*தங்களது அதிகாரம் தற்காலிகமானது என்பதையும் என்ன காரணமாக இருந்தாலும் மக்களின் வாக்குரிமையை நிராகரிப்பதற்கு தங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்பதையும் அதிகாரத்தில் இருப்பவர்கள் விளங்கிக் கொள்ளவேண்டியது அவசியமாகும்.* ●

